Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 08 ஞாயிற்றுக்கிழமை (24.07.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 217

அருந்துங்கள்
அண்ணா கோப்பி
அண்ணா கோப்பியை
[illegible]
அண்ணா கோப்பிக்கடை
4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

# பிரதி இந்தியத் தூதுவரின் வாகனம் துப்பாக்கிமுனையில் கடத்தல்

## நேற்றுக்காலை சம்பவம்

இலங்கைக்கான இந்தியப் பிரதித் தூதுவரின் டொயட்டா லான்ஸ் குரூஸ்னர் சொகுசுவாகனம் நேற்றுக் காலை கொழும் புக்குச் செல்லும் வழியில் வைத்து இனந் தெரியாத துப்பாக்கிதாரர்களினால் கடத் திச் செல்லப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.40 மணியளவில் கண்டியிலுள்ள அவரின் வாசஸ்தலத்திலி ருந்து கொழும்புக்கு தனது குடும்பத்தின ருடன் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்ட பிரதி இந்தியத் தூதுவர் கே.என்.ராஜன் பிள்ளை கொழும்பு கண்டி பிரதான வீதி யில் அமைந்துள்ள அம்பேபுஸ்ஸ எனும் இடத்தில் தேநீர் அருந்துவதற்காக வீதி யில் வாகனத்தை நிறுத்தினார்.

அப்போது திடீரென அங்குவந்த இரண்டு இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் அவரது வாகனச் சாரதியினை துப்பாக்கிமுனையில் மிரட்டி வாகனத்தின் சாவியை அபகரித்து கொழும்பை நோக்கி வாகனத்தை எடுத் துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் குறித்து அண்மையிலுள்ள வறக்காப்பொல பொலிஸில் முறையிட்ட னர். பின்னர் உதவி உயர்ஸ்தானிகரும், அவரது குடும்பமும் பாதுகாப்பாக கொழும் பைச் சென்றடைந்ததாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் அந்த வாகனத்தை தேடும் பணியில் தீவிர மாக ஈடுபட்டுள்ளனர். உலங்கு வானூர்தி களும் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள் ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச)

# தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு

(கிளிநொச்சி)

வடக்குக் கிழக்கு தமிழர் தாயகப் பிர தேசங்களைச் சேர்ந்த பொது அமைப்புக் களுடைய பிரதிநிதிகள் மற்றும் பேராளர் கள் கலந்துகொள்ளும் தமிழீழ வரலாற் றில் முக்கியத்துவம்பெற்ற தமிழீழ தேசிய எழுச்சி மாநாடு எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, அம்பாறை, மட் டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 1000 இற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் பேரா ளர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளதாக வன்னிமாவட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவ சக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

# உயர்நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக அரசாங்கம் பதில் மனுத்தாக்கல்

## எதிர்வரும் 29ஆம் திகதி மேற்கொள்ளும்

(நமது நிருபர்)

**பொதுக் கட்டமைப்புக்களின் நான்கு பிரிவுகளுக்கு உயர்நீதிமன்றம் இடைக்கால தடைவிதித்துள்ள நிலையில் எதிர்வரும் 29ஆம் திகதி அரசாங்கம் தனது பதில் மனுவைத் தாக்கல் செய்யவுள்ளது. அதன் பின்னர் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயா ராக இருப்பதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.**

ஆழிப் பேரலை நிவாரணப் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக அரசும் புலி களும் இணைந்து ஏற்படுத்திக்கொண்ட பொதுக் கட்டமைப்பை ரத்துச்செய்யக் கோரி ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப் பினர்கள் தாக்கல்செய்திருந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம் பொதுக்கட்டமைப்பின் நான்கு பிரதான விடயங்களுக்கு இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பித்திருந்து.

- கிளிநொச்சியில் மத்திய செயலகம் அமையக்கூடாது.
- அதன் பிராந்திய சபைத் திட்டங்களை நிர்வகிக்கவோ அல்லது அங்கீகரிக்கவோ முடியாது.
- பிராந்திய நிதியம் உருவாக்கமுடியாது.
- திட்ட முகாமைத்துவக்குழுவை அரசின் கீழ் மாற்றவேண்டுமென உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை பொதுக்கட்டமைக்கு செயலிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. அது குறித்து நிதியமைச்சர் தெரிவிக்கையில்,

(02 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவல்படை வீரர் திருமலையில் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை தம்பலகாமத்தில் நேற்றிரவு ஊர்காவல் படைவீரர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளார்.

அவர் கடமையில் இருந்து நேரம் இச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத் துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றுள்ள தாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)



பலாலிவீதி தபால்பெட்டிச் சந்தியில் உள்ள செல்லக்கிளி அம்மானின் நினைவுத் தூபியில் நேற்று நடைபெற்ற நினைவு நிகழ்வில் இருந்து...

# மிருசுவில் படுகொலை வழக்கு புதிய நீதியரசர்கள் நியமனம்

(கொழும்பு)

மிருசுவிலில் சிறுவர் உட்பட ஏழு அப்பாவிப் பொதுமக்கள் கொடூரமாக வெட்டிக்கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவத்தினருக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள ட்ரயல் அட்பார் நீதிமன்ற வழக்கை விசாரிப்பதற்கு மூன்று புதிய நீதிபதிகளை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா நியமித்துள்ளார்.

இந்த வழக்கை முன்னர் விசாரித்துவந்த ட்ரயல் அட்பார் நீதிமன்றின் மூன்று நீதிபதிகளில் ஒருவரான எஸ்.ஐ.இமாம், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராகப் பதவியுயர்வுபெற்றுச் சென்றுவிட்டார்.

மற்றொரு நீதிபதியான சரத் அம்பேப்பிட்டிய சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

மூன்றாவது நீதிபதியான குமார் ஏக ரத்ன ஒழுங்கு நடவடிக்கை செயற்பாடு காரணமாக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவ்வழக்கு விசாரணை 2003 ஆம் ஆண்டிலிருந்து (02 ஆம் பக்கம் பார்க்க)

# பொது நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதற்கு ஜனாதிபதி - ரணில் இவ்வாரம் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் ஓரிரு நாட்களில் விசேட சந்திப்பொன்று நடைபெறவுள்ளதாக ஜனாதிபதி மாளிகை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் பொதுவானதொரு நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கான இணக்கத்தை ஏற்படுத்திக்கொள்வதற்காகவே இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவிற்கும் ஜனாதிபதிக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பில் எடுக்கப்பட்ட முடிவின்படி இச்சந்திப்பு நடைபெறவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் (02 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை.

# மூளாய் வைத்தியசாலையில் நீரிழிவு நிலையம் இன்று திறப்பு

மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையில் நீரிழிவு நிலையம் இன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

இன்று காலை 10.30 மணிக்கு விசுவநாதர் வேலுப்பிள்ளை தலைமையில் திறப்பு விழா வைபவம் நடைபெறவுள்ளது.

இங்கிலாந்தின் இரத்தினம் நிறுவனத்தின் அனுசரணையுடன் இந் நீரழிவு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

நல்ல பரிசோதனை, உணவுக் கட்டுப்பாட்டுக்கு வேண்டிய ஆலோசனை, சிறந்த சிகிச்சை என்பவற்றை இந்நிலையம் இலவசமாக வழங்கவுள்ளது. (ச)

# எழுச்சியுடன் நடைபெற்ற செல்லக்கிளி அம்மானின் நினைவு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

1983 ஆம் ஆண்டு வரலாற்று பெருமைமிகு திருநெல்வேலி கண்ணிவெடித் தாக்குதலை தலைமையேற்று நடத்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்ரினன்ட் செல்லக்கிளி அம்மானின் 22 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் பலாலி வீதி தபால்கட்டைச் சந்தியிலுள்ள அவரது நினைவுத் தூபிக்கு முன்னால் நேற்றுக் காலை நடைபெற்றது.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த அ.புவிராஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ். துணை அரசியல் பொறுப்பாளர் ந.கண்ணன், பொது அமைப்புக்களின் ஒன்றிய ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், பொது அமைப்புக்களின் பொறுப்பாளர் அ.சுதாஸ், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் க. விஜயரூபன், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த செ.யசோ ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

ஈகச் சுடரினை யாழ். பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர். சி.செழியன் ஏற்றிவைத்தார். செல்லக்கிளியின் நினைவுத்தூபிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன. மலர்மாலையை அணிவித்தார்.

நினைவுரையை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி நிகழ்த்தினார். (ச-8)

# நால்வருக்கும் பிணை அனுமதி

(வவுனியா)

ஓமந்தை முன்னரங்கப் பகுதியில் இராணுவக் காவலரண்களை வெட்டிக்கொண்டு உளநுழைய முயன்றவேளை படையினரால் கைதுசெய்யப்பட்ட வன்னிப்பிரதேசவாசிகள் நான்கு பேர் நேற்று பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

படையினரால் கைதுசெய்யப்பட்ட நான்கு பேரையும் பொலிஸார் வவுனியா நீதிமன்றில் ஆஜர் செய்தபோதே மாவட்ட நீதிவான் அவர்களை பிணையில் செல்ல அனுமதித்தார்.

படையினரின் முட்கம்பி வேலிகளை வெட்டிக்கொண்டு உள்நுழைய முயன்றவேளையிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

அதேவேளை காணாமல் போன தமது மாடுகளைத் தேடி வந்ததாக கைதுசெய்யப்பட்ட நான்குபேரும் நீதிமன்றில் தெரிவித்தனர். (ச-8)

## தமிழ்த்தேசிய...

இந்த எழுச்சி மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் 14 தீர்மானங்கள் எடுக்கப்பட்டு இறுதியில் பிரகடன அறிக்கை வாசிக்கப்படும். இப்பிரகடன அறிக்கை சர்வதேச சமூகத்திற்கும், வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

1983 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 52 தமிழ் அரசியல் கைதிகளின் படுகொலைசெய்யப்பட்ட தினத்தில் இது நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

## உயர்...

புலிகள் இன்னும் அவர்களுடைய பிரதிநிதிகளின் பெயர்களை அறிவிக்கவில்லை. அவர்களுடைய பதிலுக்காகக் காத்திருக்கிறோம் என்றார். உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பால் நாம் சோர்வடைந்து விடவில்லை. அரச தரப்பில் பதில் மனுத்தாக்கல் செய்வதற்கு அவகாசம் வழங்கப்பட்டது.

இதன்படி எதிர்வரும் 29 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் பதில் மனுவைத் தாக்கல் செய்யவுள்ளோம்.

அதன் பின்னர் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை நாம் ஏற்றுக் கொள்வோம் என்று நிதியமைச்சர் கூறினார். (ச)

## மிருசுவில்....

நடைபெறவில்லை. அதனைத் தொடர்ந்து விசாரணை செய்வதற்காக மூன்று புதிய நீதிபதிகளை பிரதம நீதியரசர் நியமித்துள்ளார்.

நீதிபதிகள் உபாலி அபேயரத்ன, தீபாலி விஜேய சுந்தர, சுனில் ராஜபக்ஸ ஆகியோரே இந்த ட்ரயல் அட்பார் நீதிமன்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி யாழ்ப்பாணம் மிருசுவிலில் இடம்பெயர்ந்து சென்றிருந்த ஏழுபேர் தமது வீடுகளைப் பார்ப்பதற்காக திரும்பிச் சென்ற சமயம் அவர்களை வெட்டிப் படுகொலை செய்தனர் என இவ்வழக்கில் ஐந்து இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு விசாரணை நாளை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது. (ச)

## பொது நிகழ்ச்சி...

அழைப்பின்பேரில் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் இவ்வாண்டுக்குள் நடைபெற வேண்டுமென்பதில் தமது கட்சி கடும் நிலைப்பாட்டை உடையது என்றும், அதில் எவ்வித மாற்றங்களையும் ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி அனுமதிக்காது என்றும் மலிக் சமரவிக்கிரம ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார். (ச-4)

# முத்தலிப் கொலை சந்தேகப்பெண் குறித்து புதிய தகவல்கள் கசிவு!

(கொழும்பு)

முத்தலிப் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் சறோஜா என்ற பெண் ஏற்கனவே கைதாகி விடுதலையானவர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேஜர் முத்தலிப்பின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள சறோஜா என்ற பெண் சில வாரங்களுக்கு முன்னர் கொட்டாஞ்சேனைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவரென பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கொட்டாஞ்சேனைப் பகுதியில் இருந்த விடுதி ஒன்றில் தங்கியிருந்தபோது சந்தேகத்தின்பேரில் இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவர் பற்றிய முக்கிய தகவல்கள் எதுவும் வெளியாகாததால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

தற்போது விளக்கமறியலில் இருப்பவரான செந்தில்குமார் எனப்படும் ராஜன், சறோஜாவுடன் களனி கோணவலப் பிரதேசத்தில் வசித்தவர் என்றும் பொலிஸ் தகவல்கள் கூறுகின்றன.

இவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரிடமும் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இக்குழுவுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்த மேலும் சிலரை விரைவில் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முத்தலிப்பின் கொலையின் பின்னர் மற்றுமொரு பொலிஸ் புலனாய்வுப் பிரிவு அதிகாரியைக் கொலைசெய்ய இந்தக் குழுவினர் திட்டமிட்டு இருந்ததாகவும், அவர் தனது பாதுகாப்பினை பலப்படுத்தியதை அடுத்து அவர் உயிர் தப்பியிருப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# களுவாஞ்சிக்குடி வர்த்தகர்களுடன் புலிகள் முக்கிய கலந்துரையாடல்

## சமகால நிலை தொடர்பாக ஆராய்வு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் களுவாஞ்சிக்குடி வர்த்தகர்களுக்கும். இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

களுவாஞ்சிக்குடி சரஸ்வதி வித்தியாலயத்தில் வர்த்தக சங்கத் தலைவர் கே.பரமானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பண்டிருப்பு கோட்டக் அலுவலகப் பொறுப்பாளர் செல்வம் தலைமையிலான குழுவினர் கலந்துகொண்டனர். சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இச்சந்திப்பில் தற்போதைய நிலைமை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. (ச-8)


மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

நீரிழிவு நிலையத் திறப்புவிழா



இடம்: மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

காலம்: 24.07.2005 ஞாயிறு (இன்று) காலை 10.30மணி

தலைமை: திரு. விசுவநாதர் வேலுப்பிள்ளை (J.P)

(கூட்டுறவு வைத்தியசாலை சங்கத் தலைவர்)

பிரதம விருந்தினர் : ஆர்.நித்தியானந்தன் (வைத்தியர்)

இவ் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு தலைவர், பணிப்பாளர் சபையினர், பணியாளர்கள், இங்கிலாந்து இரத்தினம் தர்ம ஸ்தாபனத்தினர் அன்புடன் வேண்டிக்கொள்கின்றனர்.

குறிப்பு: மூன்று மாத காலத்திற்கு இலவச நீரிழிவுநோய் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.

நிர்வாகம்

விளம்பர அனுசரணை : RST அரிசி - பாலன் மில்
மாவடிச் சந்தி - வட்டுக்கோட்டை (சி-1489)



மனமுவந்து வாழ்த்தி பாராட்டுகின்றோம்



உயர்திரு. வைத்திலிங்கம் செல்லத்துரை

கொழும்பு கொம்பனித் தெரு சைவ முன்னேற்ற சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும், நீர்வேலி அத்தியார் இந்துவின் முன்னாள் உப அதிபரும், சமூக சேவையாளரும் எமது நிறுவனத்தின் தலைவருமான உயர்திரு. வைத்திலிங்கம் செல்லத்துரை அவர்கள் தனது 80 ஆவது அகவையில் காலடி பதிப்பதையொட்டி நாம் மனமுவந்து வாழ்த்திப் பாராட்டுகின்றோம். அத்துடன் அவரது சேவை மேன்மேலும் தொடரப் பிரார்த்திக்கின்றோம்..

இருபாலைச் சந்தி கோப்பாய் (9750) கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவு



நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
15.07.2005 முதல்




கா.நே:10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ் (சங்கானை)
ரஜனி, நயந்தாரா நடித்த இன்று முதல்
சந்திரமுகி
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே

மனோகரா யாழ்ப்பாணம்
இன்று முதல்
மாதவன், சதா, கோவை சரளா நடித்த
பிரியசகி
அதிரடி வெளியீடு இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினத்தில்
கா.நே:10.30, 2.30, 6.30, 9.30



பணி ஆட்கள் உடன் தேவை

புடவைக் கடையில் பணியாற்றிய அனுபவமுள்ளவர்களும், பயிலுநர்களும் உடன் தேவை.

க.பொ.த. உயர்தரம் அல்லது க.பொ.த. சாதாரணதரம் படித்த ஆண்கள் நேரில் வரவும்.

தொடர்பு;
சிவகணேசன் புடவையகம்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(1488)

# அனர்த்த தினத்திலிருந்து ஆறு மாதங்கள் வரை...

(யாழ்ப்பாணம்)

**கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் நாடளாவிய ரீதியில் மொத்தம் 31 ஆயிரத்து 229 பேர் பலியாகியுள்ளதுடன், 4 ஆயிரத்து 100 பேர் காணாமல் போயுள்ளதாகவும் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான படையணி (ரவ்றன்) யின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

*சுனாமி அனர்த்தம் இடம்பெற்று ஆறு மாதங்கள் கழிந்துள்ள நிலையில் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், அரச, அரசசார்பற்ற, வெளிநாட்டு, உள்நாட்டுத் தொண்டு அமைப்புகள் என்பனவற்றின் உதவிகள் உள்ளடங்கலாக இவ் அனர்த்தத்தினால் ஏற்பட்ட சேத விபரங்கள் என்பனவற்றையும் உள்ளடக்கி இவ் ரவ்றன் அமைப்பு அறிக்கையொன்றைத் தயாரித்துள்ளது.*

அவ்வறிக்கையிலேயே மேற்படி விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது,

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சுனாமியால் 31,229 பேர் மரணமடைந்துள்ளனர். 4,100 பேர் காணாமல் போயுள்ளனர், தற்போதைய பதிவுகளின்படி 516, 150 பேர் வாழ்விடங்களை இழந்து நலன்புரி நிலையங்கள், நண்பர்கள, உறவினர்கள் வீடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையிலுள்ள 28 மாவட்டங்களில் 14 மாவட்டங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ளன.

23,449 ஏக்கர் வளம் நிறைந்த நிலம் பாதிக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் 9,000 ஏக்கர் வயல் நிலம், 645 ஏக்கர் பயிர் விளையும் பூமி, 12, 928 வீட்டுத்தோட்டங்கள், 559 ஏக்கர் மரக்கறிப்பண்ணைகள் மற்றும் 317 ஏக்கர் பழத்தோட்டங்கள் என்பன அடங்கும் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

16, 479 மீன்பிடி நிலையங்கள் முழுமையாக அல்லது பகுதியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 50 வீதமானவை படகுத் தொகுதிகள் என மீன்பிடி மற்றும் விவசாய அமைச்சு அறிவித்துள்ளது,

86 மருத்துவ நிலையங்கள் முழுமையாக அல்லது பகுதியாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகங்கள் உட்பட 195 கல்வி நிலையங்கள் மற்றும் தொழில் பயிற்சி நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 59 பாடசாலைகள் முழுமையாக அழிந்துள்ளன. 117 பாடசாலைகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

அதேவேளை, 275,000 பேர் வேலைவாய்ப்பினை இழந்துள்ளனர். பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளில் 10 இல் 9 வீதமானோர் வேலைவாய்ப்பின்றி உள்ளனர்.

## தங்குமிடங்கள்

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் குழுக்கள் மற்றும் ஐ.நா.அகதிகளுக்கான நிதியம் (UNHCR), இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச அமைப்பு (IOM) மற்றும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் (UN) எனப் பல அமைப்புக்களால் 150, 000 குடும்பங்கள் வாழ்வதற்கான 31,000 தற்காலிக வீடுகள் தற்போது அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

54,266 தற்காலிக வீடுகள் யூலை மாதக் கடைசிப் பகுதியில் பூர்த்தியாகுமென்று ஐ.நா.அகதிகளுக்கான நிதியம் (UNHCR) அறிவித்துள்ளது.

ஜூன் மாதம் முதல் வாரம் வரை 9,480 குடும்பங்கள் தற்காலிகக் கூடாரங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

480,000ற்கும் அதிகமான உணவு அல்லாத நிவாரண உதவிகளை (நுளம்புவலைகள், சமையல் பாத்திரங்கள், குளியல் சாதனங்கள், ஏனைய பொருட்கள்) சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் (UN) வழங்கியுள்ளது.

## உணவு

உலக உணவுத் திட்டத்தின் 53,000 உதவி வழங்குநர்களால் 910,000 பேருக்கான உணவு வழங்கப்பட்டுள்ளது.

## ஆரோக்கியம்

யுனிசெவ் மற்றும் உலக சுகாதார மையம் என்பவற்றால் 101 அவசர மருந்துவ முகாம்கள், வைத்திய பரிசோதனை நிலையங்கள் என்பன அமைக்கப்பட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட 1,500, 00 பேருக்கு ஆரோக்கிய சேவை வழங்கப்பட்டுள்ளது.

600 மலேரியா துரித தடுப்பு மருந்துகள் மேலும் 1000 மலேரியா தடுப்பு மருந்துகள் உள்ளடங்கிய மருந்துப் பொதிகளை ஐக்கிய நாட்டு (UN) ஸ்தாபனம் வழங்கியுள்ளது.

48,000 நுளம்பு வலைகளை யுனிசெவ் மற்றும் உலக சுகாதார நிறுவனம் என்பன வழங்கியுள்ளன. 50,000 நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளதாகவும் ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

10,000 குளோரின் மாத்திரைகள், 500 குளோரின் சோதனை சாதனங்கள், 30 பக்றீரியா சோதனைக்கருவிகள் மற்றும் 900 லை சலகூட சுத்திகரிப்புக் கருவிகள் என்பவற்றையும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் (UN) வழங்கியுள்ளது.

6 மாதக் குழந்தையில் இருந்து 5முதல் 10 வரையான சுனாமியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு 384, 885 விற்றமின் 'A' மாத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## நீர் மற்றும் சுத்திகரிப்பு

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள கிணறுகளில் குறைந்தது 650 கிணறுகளை யுனிசெவ் துப்புரவு செய்து வழங்கியுள்ளது. தற்காலிக தங்குமிடங்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு யுனிசெவ் மற்றும் உலக சுகாதார நிறுவனம் என்பன நீரைத் தூய்மையாக்கும் சாதனங்களையும் வழங்கியுள்ளன.

285 நீர்த்தாங்கிகள், 96 சாதாரண கொள்கலன்கள் ஒவ்வொன்றும் 1500 லீற்றர் கொண்ட பாரிய நீர்த் தாங்கிகள் எனப் பல்வேறு வகையான நீர்த்தாங்கிகளை யுனிசெவ் நிறுவனம் வழங்கியுள்ளது.

## கல்வி

200,000 சிறுவர்களுக்குப் பாடசாலை உபகரணங்களை யுனிசெவ் வழங்கியுள்ளது. இவை தவிர 1,350 சிறுவர்களுக்கு ஓய்வு நேர பொழுதுபோக்கு ஏற்பாடுகளையும் யுனிசெவ் செய்து கொடுத்துள்ளது என அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)


சிறுவிளம்பரம்

விற்பனைக்குண்டு

National ரக குளிர்சாதனப் பெட்டி 1

2ஆட்டுக்கிடாய்.

தொடர்பு:-20, கொழும்புத்துறை வீதி. (C/1487)


# பொலிஸாருக்கு பயிற்சி

(கொழும்பு)

கொழும்புப் பிரதேசத்தில் விசேட கடமைகளுக்காகப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 250 பேரைப் பயிற்றுவிக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்புப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்த அதிகாரிகளின் எண்ணிக்கையினை ஆயிரமாக அதிகரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார். (அ-4)

# பட்டதாரி நியமனங்கள்

(கொழும்பு)

பெண்கள் வலுவூட்டல் சமூக நல அமைச்சின் ஊடாக வடக்கு - கிழக்கு மாகாணப் பட்டதாரிகளுக்கு மீண்டும் நியமனங்கள் வழங்கப்படுமென பெண்கள் வலுவூட்டல் சமூகநல அமைச்சர் சுமேத ஜெயசேன தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட அமைச்சினால் 374 பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்றபோது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த 374 பேரில் வடக்குக் கிழக்கு மாகாணப் பட்டதாரிகள் அடங்கியுள்ளதாகப் பெண்கள் வலுவூட்டல் சமூக நல அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பெண்கள் வலுவூட்டல் அதிகாரிகளாகவும், சிறுவர் நலன் பராமரிப்பு அதிகாரிகளாகவும், அரச சார்பற்ற அமைப்பு அதிகாரிகளாகவும் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-9)

# நிதி ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத திட்டத்தின் கீழ் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை கச்சாய்வெளி முன்பள்ளிக் கட்டடத் திருத்தத்திற்காக ரூபா 30 ஆயிரமும், பச்சிலைப்பள்ளி உ.அ.அ. பிரிவு நூல் நிலையங்களுக்குப் புத்தகங்கள் வழங்குவதற்காக ரூபா 1 இலட்சமும் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# பொதுக் கூட்டம்

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க 24 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்கானை சங்கப் போத்தலடைப்பு நிலையத்தில் சங்கத் தலைவர் வ.முத்துராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-49)

# இராசிபலன்

24.07.2005

(ஆடி 8, ஞாயிற்றுக்கிழமை)

திருதியை முற்பகல் 10.23 மணிவரை

சதயம் முன்னிரவு 9.55 மணிவரை

இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

சுபநேரம் - 9.02-10.32 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்

| | |
|---|---|
| மேடம் | நண்பர்கள் சந்திப்பு, சயனசுகம், கீர்த்தி, காரிய சித்தி. |
| இடபம் | பிரபுத்தனம், மனமகிழ்ச்சி, எடுத்த கருமங்கள் கைகூடும், பிறருக்கு உதவிசெய்தல். |
| மிதுனம் | சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு, காரியதாமதம், பிரயாணம். |
| கடகம் | அஜீரணக் கோளாறு, பொருள் விரயம், மனக் கவலை, அபகீர்த்தி. |
| சிங்கம் | தேக நலன், கலந்துரையாடல், நல்ல காரியம், விருந்துபசாரம். |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், மன மகிழ்ச்சி, புதிய சிந்தை, போசன சுகம். |
| துலாம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, மனச் சஞ்சலம், பண விரயம். |
| விருச்சிகம் | தாய்வழி உறவு, சுபசெலவு, புதிய முயற்சி, ரோக நிலை. |
| தனுசு | அன்னியர் சந்திப்பு, மனோதைரியம், போசன சுகம், காரிய நன்மை. |
| மகரம் | மனோ சங்கடம், போசன சுகக் குறைவு, காரியதாமதம், பொருள் விரயம். |
| கும்பம் | வெகுமானம், சயன சுகம், நல்ல முயற்சி கற்பனை மிகுதி. |
| மீனம் | சோம்பல் நிலை, மனக் குழப்பம், சுபசெலவு, முயற்சி தாமதம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

# காணி பற்றாக்குறையால் எல்லை நிர்ணயத்தில் தளர்வு

## உயர்மட்டக் குழு ஆராய்வு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை, கல்முனை போன்ற பகுதிகளில் நிரந்தர வதிவிடங்களை அமைப்பதற்கான காணிகள் இல்லாதவிடத்து 200 மீற்றர் தூர எல்லையில் தளர்வு நிலையைக் கடைப்பிடிப்பது தொடர்பாக ஜனாதிபதி தலைமையிலான உயர் மட்டக்குழு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இம் மாத இறுதிக்குள் 20 ஆயிரம் வீடுகளுக்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ள அதேநேரம் சுமார் 2 ஆயிரம் வீடுகளின் நிர்மாண வேலைகள் இதுவரை பூர்த்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசின் 100 மீற்றர் 200 மீற்றர் தூர எல்லைக் கொள்கையினால் சில பகுதிகளில் உடனடியாக மாற்றுக் காணிகளைக் கண்டறிய முடியாதுள்ளது.

குறிப்பாக பருத்தித்துறையில் மாற்றுக் காணிகள் கண்டறிவதில் சிக்கல்கள் எழுந்துள்ளன. இதனாலேயே இப்பகுதிக்கான வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது.

ஜனாதிபதித் தலைமையில் 15 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவின் சிபாரிசுக்கமைய தூர எல்லைகளில் தளர்வு நிலை கடைப்பிடிக்கப்படுவதுடன் வீடமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் யாவற்றிலும் சுமார் 80 ஆயிரம் வீடுகள் சேதமாகியுள்ளன. இரண்டரை இலட்சம் ரூபா, 1 இலட்சம் ரூபா உதவு தொகையின் ஊடாக சுமார் 30 ஆயிரம் வீடுகள் புனரமைக்கப்படவுள்ளன.

எஞ்சிய 50 ஆயிரம் வீடுகளை சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் உதவி வழங்கும் நாடுகளின் உதவியுடன் கட்டிக் கொடுப்பதே அரசின் திட்டமெனவும் டெப்ரன் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற-7)

# கிராண்ட்பாஸ் கொலைச்சம்பவம்; சந்தேக நபர் இருவர் கைது

(கொழும்பு)

கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இரு சந்தேக நபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் பிரதான சந்தேக நபரும் அடங்குவதாக கிராண்ட்பாஸ் தலைமையகப பொலிஸ் இன்ஸ்பெக்டர் டி.எஸ்.ஜெயசுந்தர் கூறியுள்ளார்.

இந்தக் கொலைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட கூரிய ஆயுதம் ஒனறும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கிராண்ட்பாஸ் ஏஸ்பிராயப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலைத் தடுக்கச் சென்ற இருவரே கொல்லப்பட்டதாகப் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த மோதலின் போது காயமடைந்த 6 பேரில் இருவர் கொழும்பு வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மற்றைய நால்வரும் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர். இந்த மோதல் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-2)

# கட்டாயக் கல்விக் குழுக்களின் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்படும்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பினதங்கிய பிரதேச பாடசாலைகளில் உருவாக்கப்பட்டுள்ள கட்டாயக் கல்விக் குழுக்களின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான ஏற்பாடுகளை மாகாணக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கட்டாயக் கல்விக் குழுக்களின செயற்பாடுகளுக்குப் புத்துயிரளிப்பதன் மூலம் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவிய யுத்த அனர்த்தம் வறுமை மற்றும் கல்வி தொடர்பாக விழிப்புணர்வு இல்லாமையினால் பின்தங்கிய பிரதேசங்களில் உரிய வயதை அடைந்தும் பெருமளவான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாது இருப்பதாக ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவ்வாறான சிறுவர்களைக் கண்டறிந்து அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கும் நோக்கத்துடன் பிரதேச மட்டத்தில் கட்டாயக் கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் கிராமசேவை அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கியதாகக் கட்டாயக் கல்விக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-9)

# இளவரசர் வில்லியம்சை முத்தமிட ஆசை — த்ரிஷா

தமிழ் - தெலுங்குப் பட உலகில் கொடிகட்டிப் பறக்கும் த்ரிஷா வுக்குத் தெலுங்கில் 'வர்ஷம்' படத்தில் நடித்ததற்காக சிறந்த நடி கைக்கான பிலிம்பேர் விருது கிடைத்திருக்கிறது. இதனால் மிகுந்த மகிழ்ச்சியில் இருக்கும் த்ரிஷாவிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அவர் அளித்த பதில்களும் இதோ...

**கேள்வி :- உங்களுக்கு மகிழ்ச்சி தரும் விஷயம் என்ன...?**

பதில; :- தெலுங்கில் நடித்த 'வர்ஷம்' படத்துக்காக சிறந்த நடிகைக்கான பிலிம்பேர் விருது எனக்குக் கிடைத்திருக்கிறது. இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி யைத் தந்திருக்கிறது.

**கேள்வி :- உங்கள் வெற்றியின் இரகசியம்?**

பதில; :- அதிர்ஷ்டம்

**கேள்வி :- பிடித்த கடவுள்?** பதில; :- இயேசு

**கேள்வி :- பிடித்த விளையாட்டு வீரர்?**

பதில; :- டெண்டுல்கர். எத்தனை வெற்றி பெற்றாலும் அவரிடம் கர்வம் இல்லை.

**கேள்வி :- பிடித்த இடம்?**

பதில; :- ரோம். அடுத்த பிறவி இருந்தால் அங்குதான் பிறக்க வேண்டும்.

**கேள்வி :- உங்களுக்கு மிகவும் பிடித்தவர்?**

பதில; :- அம்மா... அவர் பேரழகி. அவரால்தான் நான் இந்த வளர்ச்சி அடைந்திருக்கிறேன். எல்லா விஷயத்தையும் அவரிடம்தான் கற்றேன்.

**கேள்வி :- எந்த வேடத்தில் நடிக்க ஆசை...?**

பதில; :- 'வாலி' படத்தில் சிம்ரன் நடித்தது போன்ற வேடம்.

**கேள்வி :-ரஜினி - கமல் இரண்டு பேரும் நடிக்கும் படத்தில் உங்க ளுக்கு கதாநாயகி வாய்ப்பு கிடைத்தால் யாருடன் நடிப்பீர்கள்?**



பதில; :- இரட்டை வேடம் போட்டு இரண்டு பேரிடமும்.

**கேள்வி :- யாருக்கு முத்தம் கொடுக்க ஆசை?**

பதில; :- இங்கிலாந்து இளவரசர் வில்லியம்ஸ்...க்கு

**கேள்வி :- உங்களுக்கு மிகவும் பிடித்தவர்?**

பதில; :- கார்ப்பந்தய வீரர் மைக் கேல் சூமேக்கர்.

**கேள்வி :- காதல் என்பது?**

பதில; :-ஒருவர் ஒருவரைப் புரிந்துகொண்டு நேசிப்பது.

**கேள்வி :- நீங்கள் முதல் அமைச்சர் ஆனால்...?**

பதில; :- அனைவருக்கும் கட்டாயக் கல்வி என்ற சட்டம் கொண்டு வருவேன்.

**கேள்வி :- உங்கள் அழகிய கனவு?**

பதில; :- திருமணம்.

**கேள்வி :- தெலுங்கில் அதிக சம்பளம் வாங்கும் நடிகையாக இருப்பது பற்றி..?**

பதில; :- நிறையப் படங்கள் வருகிறது... என்றாலும் நல்ல கதை களில் மட்டுமே நடிக்கிறேன்.

**கேள்வி :- சென்னைக்கும் ஐதராபாத்துக்கும் பறந்து கொண்டு இருக்கிறீர்களே..?**

பதில; :- தமிழில் விஜய்யுடன் 'மாஸ்', சூர்யாவுடன் 'ஆறு', ஜெயம் ரவியுடன் ஒரு படம் நடிக்கிறேன். எனவே அங்கம் இங்கும் வேலை இருக்கிறது.

**கேள்வி :- எப்படி படங்களைத் தேர்வு செய்கிறீர்கள்?**

பதில; :- எனக்குப் பிடித்த பாத்திரம்... நல்ல டைரக்டர்கள்.. என்று தேர்ந்தெடுக்கிறேன்.

**கேள்வி :- சினிமா மீது வெறுப்பு ஏற்பட்டதுண்டா?**

பதில; :- ஆரம்பத்தில்... சினிமாவை விட்டு விட்டு படிக்கப் போகலாமா என்று நினைத்தேன். அம்மாதான் என்னைச் சமாதானம் செய்தார். 2 மாதம் சிட்னி சென்று என். தோழி வீட்டில் தங்கினேன். பிறகு திரும்பி வந்தேன்.

**கேள்வி :- சினிமாத் துறை பற்றி...?**

பதில; :- நல்ல பெயர் வாங்க வேண்டும் என்றால் சொந்த வாழ்க்கை மற்றும் சில சந்தோஷங்களைப் பலியிட வேண்டும்.

**கேள்வி :- உங்கள் நண்பர்கள் பற்றி...?**

பதில; :- எனக்கு நிறைய தோழிகள். போய் பிரண்ட்கள் உண்டு. அவர்களு டன் ஆடுவேன், பாடுவேன், அது பற்றி யார் குறை சொன்னாலும் கண்டு கொள்ளமாட்டேன்.

**கேள்வி :- கிசுகிசு வருவது குறித்து?**

பதில; :- கால் மேல் கால் போட்டு இருப்பதைக் கூட குறை சொல்லி எழுதுகிறார்கள். என்னையும் என் குடும்பத்தையும் பற்றி இல்லாததை எழுதும் போது கஷ்டமாக இருக்கிறது.

**கேள்வி :- சினிமா வாழ்க்கை எப்படி இருக்கிறது?**

பதில; :- ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்தால் ஒரே இடத்தில் உட்கார வேண்டும். சினிமா அப்படியல்ல. இடைவிடாமல் வேலை இருக்கிறது... என்றாலும் விதம் விதமான சூழ்நிலை... மகிழ்ச்சி தருகிறது.

**கேள்வி :- வாழ்க்கையில் என்ன கற்று இருக்கிறீர்கள்...?**

பதில; :- பொறுமை, நம்பிக்கை.

# சினிமாச் சிதறல்



'தம்பி'

'வல்லவன்' படத்தை மிகவும் நம்பியிருக் கிறேன். இப்படம் வந்தால் எனக்கு பல படங்கள் 'புக்' ஆகும் எனக்கூறும் ரீமா சென், நயன்தாரா, சந்தியாவை விட இப்பட்த்தில் தனக்குத்தான் மெயின் கரக்டர் என்றும் கூறி வருகிறார்.

* * *

ஒருத்தி வீரனில் சிவகுமாரின் மகன் கார்த்தியை அறிமுகப்படுத்தும் இயக்குநர் அமீர் அப்படத்தில் முக்கிய வேடம் ஒன்றில் நடிக்கிறார்.

## பணம் கொட்டும் புதுவழி

சினிமாவில் கதாநாயகியாக நடிப்பதைவிட விளம்பர படத்தில் நடித்தால் சிரமமும் குறைவு, வருமானமும் அதிகம் என்பதால் பிரபல நடிகை கள் இப்போது விளம்பரப் படங்களில் நடிக்க முதல் இடம் கொடுக்கிறார்கள்.

ஏற்கனவே சினேகா, சோனியா அகர்வால், மாளவிகா துணிக்கடை விளம்பரங்களில் நடித் திருக்கிறார்கள். இப்போது இந்த வரிசையில் ஜோதிகாவும் சேர்ந்திருக்கிறார். கஷ்டப்படாமல் வருமானம் வந்தால் யாருக்குத்தான் கசக்கும்?...

**'தகப்பன்சாமி' படத்துக்காக நீண்ட முடி வளர்த் திருக்கும் பிரசாந்த் ஆகஸ்ட் இறுதிக் குள் அப்படத்தில் தனக்குரிய பார்ட்டை முடித்து விடுமாறு இயக்குநரிடம் கூறியுள்ளார். காரணம் செப்ரெம்பரில் திருமணம்தான். 'எனது திருமணத் தின்போது நீண்ட முடி இருக்கக்கூடாது என்பதில் ஊறுதியாக இருக்கிறேன்' என சிரித்தபடி கூறி னார் பிரசாந்த்.**



'தம்பி' பூஜா

# சின்னா

## திரை விமர்சன

அன்புக்குக் கட்டுப்படாத வர்கள் யாரும் இல்லை என்ப தைச் சொல்லும் படம் இது. ராமேஸ்வரத்தில் மிகப்பெரிய ரவுடி சின்னா. கன்னாபின்னாவென்று வாழ்க்கையை அமைத்துக் கொண்ட அவன், வஜ்ரவேலுவிடம் அடியாளாக இருந்து அவர் ஏவி விடும் அம்பாக செயல்படுகி றான். அடிதடி, வெட்டு குத்து என்று களம் இறங்குகிறான்.

சென்னையில் இருந்து கடல் ஆய்வுக்காக வரும் காயத்ரி... சின்னாவை நல்லவனாக மாற்ற சபதம் எடுக்கிறாள். அவளுடைய சொல்லுக்கு அவன் கட்டுப்படும் படும் காதலைச் சொல்லுகிறான். அவன் ஒருபடி மேலே சென்று

அவள் சொன்னதால் அடி-தடி விபரீதம் ஆகிறது. அவளை ராமே அனுப்ப ஏற்பாடு நடக்கிறது. காய என்று வஜ்ரவேலு ஆவேசப்பட்டு வேலு தலையை எடுத்துவிடுகிற

காயத்ரியின் மனதை மாற்றி அ செய்து வைக்கிறார்கள். என்றாலும் வலைகள். 4 வருடங்களில் ஜெயி சின்னா...காயத்ரியை தன்னுடன் அ கிறான். அந்த முரட்டுக் காதலன் காய என்ன? என்பது கிளைமாக்ஸ்.

அர்ஜுன் தோன்றும் அறிமுக தெளிவாக்கி இருக்கிறார். அவரது



சின்னா அர்ஜுன்- சினேகா

தம் என்பதை 'அக்ஷன்' மூலம் சொ என்பதை நிருபித்து இருக்கிறா

ரவுடி என்று வரும் போது இறுகிப் உருகிப் போவதும்.. பார்ப்பவர்கள 'பிளாஷ்பேக்' கதையை சினேகாவிட கலங்க வைக்கிறார். காதல் நெரு இழுத்திருக்கிறார்.

சினேகா புதிய கோணத்தில் 'சி ரவுடியை எதிர்த்து பெண் சிங்கமாக இருப்பது தெரிந்ததும் அவனிடம் அ மணந்துகொள்வதில் தப்பில்லை என் மனதை மாற்றிக் கொள்ள முயல் தண்டனை கொடுத்துவிடக் கூடாது எ கணவனிடம் கண்ணீர் என விதம் வைத்திருக்கிறார் பெண்களை. தாரா கொடுத்திருக்கிறது.

ஜே.பி.ரெட்டி, ரியாஸ்கான், மன்சூ மிரட்டியிருக்கிறது. மணிவண்ணன் டன், வினுசக்ரவர்த்தி, கசான்கா வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்தி

கிரண் ஆட்டமும் உண்டு. சுந்த குள் இருந்த மூர்க்கத்தனமான காதலை தில் கொண்டு போகிறார். அவன் ரவு கிறது என்று படம் பார்ப்பவர்களை சுந்தர்.சிக்கே சொந்தமானது.

கிளைமாக்ஸ் காட்சியில் 'விஞ் பேரையும் அந்தரத்தில் தொங்கவிட் துக்கு கொண்டு வருகிறார். சின்னா பொலிஸாரையும் ஏவிவிட்டு... உச்ச கிளுக்க வைத்திருக்கிறார். இசை: டி தப்படுத்தியிருக்கிறார். எஸ்.பி.பால என்ற பாடல் படத்தில் மட்டுமல்ல ஒலிக்கும். சுராஜ் வசனம் 'நறுக்'.

எம். பிரசாத்தின் ஒளிப்பதிவு க தெரியாதபடி கதை ஓட்டத்தில் க

**காதல் சின**

## இன்று ஒரு தகவல்

# மரியாதை

அந்தக் காலத்தில் அஹிம்சைக்கு மரியாதை இருந்தது போலவும் இந்தக் காலத்தில் ஹிம்சைக்கு அதிக மரியாதை இருப்பது போலவும் தெரிகிறது.

ஒரு பெரியவர் இருந்தார். உண்யைப்பற்றியும், சந்தியத்தைப் பற்றியும் நிறைய உபதேசம் செய்தார். அதன்படியே நடந்தார். அவர் பின்னால் நிறையக் கூட்டம் இருந்தது. சீடர்கள் அதிகமாக இருந்தார்கள். இவரது கொள்கைக்கு மரியாதை இருந்தது. ஆனால் காலப்போக்கில் அந்த மரியாதை குறைந்துவிட்டது. அவர் பின்னால் சென்ற கூட்டமும் குறைந்துவிட்டது இது ஏன்?

இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார் ஒருவர். அதற்குப் பதில் சொல்ல வந்தார் ஒருவர். அவர் ஒரு கதையைச் சொன்னார். சீக்கியக் குட்டிக்கதை. மகான் குருநானக் உபதேசம் செய்து கொண்டிருந்த காலம் அவர் பின்னால் ஏகப்பட்ட கூட்டம் போகும் இடமெல்லாம் மக்கள் வெள்ளம். அவர் எந்த ஊருக்குப் போனாலும் எல்லோரும் பின்னால் செல்வார்கள். இந்தக் கூட்டத்தையும் அவர்களிடம் உள்ள ஆர்வத்தையும் பார்த்து விட்டு ஆச்சரியப்பட்டுப் போனார் ஒருவர்.

அவர் குருநானக்கின் நண்பர். நேராக அவர் குருநானக்கிடம் போனார். "ஆகா! உங்களுக்குத்தான் எத்தனை ஆயிரம் சீடர்கள்?" என்றார். குருநானக் இதைக் கேட்டுவிட்டு லேசாகச் சிரித்தார். அவ்வளவு தான் பதில் எதுவும் கூறவில்லை.

கொஞ்சநாள் கழித்து குருநானக் ஒரு ஊரைவிட்டு இன்னொரு ஊருக்குப் புறப்பட்டார். ஆயிரக் கணக்கான மக்கள் பின்னால் சென்றார்கள். சும்மா போகவில்லை. குரு மகராஜ் கிஜே என்று கோஷம் போட்டுக்கொண்டே போனார்கள். ஒரு சாலை ஓரமாகப் போய்க்கொண்டிருக்கிறார்கள். திடீரென்று ஒரு இடத்தில் ஆகாயத்திலிருந்து செப்புக்காசுகள் மழை மாதிரிக் கொட்டியது. கோஷம் போட்டுக்கொண்டு வந்தவர்களில் பாதிப்பேர் உடனே கலைந்து ஓடினார்கள். அவரவர்களுக்குக் கிடைத்த செப்புக் காசையெல்லாம் பொறுக்கினார்கள். மடியில் கட்டிக்கொண்டார்கள். குருநானக்கிடம் சொல்லாமல் கொள்ளால் நழுவிப்போய்விட்டார்கள். அவர் இதையெல்லாம் கவனிக்காமல் தொடர்ந்து போய்க்கொண்டே இருந்தார்.

அடுத்த ஊருக்குப் போனார். அங்கே மறுபடியும் ஒரு பணமழை. போன முறை காசு கொட்டியதல்லவா? இந்த முறை வெள்ளிக்காசு கொட்டியது. இப்போதும் இருந்த கூட்டத்தில் பாதிப் பேர் கலைந்து ஓடினார்கள். முடிந்தளவுக்கு வெள்ளிக் காசை அள்ளி எடுத்துக் கொண்டார்கள். நல்ல பிள்ளைக்கு அடையாளமாக சொல்லாமால் கொள்ளாமல் நழுவிப் போய்விட்டார்கள்.

குருநானக் தொடர்ந்து போகிறார். இன்னொரு ஊரில் மறுபடியும் பணமழை. இந்த முறை வெறும் தங்கக்காசாக வந்து விழுந்தது. இதைப் பார்த்ததும் மீதிப் பேரும் கலைந்து ஓடிப் போனார்கள். தங்கக் காசை அள்ளிக் கொண்டு அம்பேல் ஆனார்கள். குருநானக் திரும்பிப் பார்த்தார். கடைசியாக எஞ்சியிருந்தது ஒரே ஒரு சீடர்தான். செப்புக்காசு, வெள்ளிக் காசு, தங்கக்காசு எதையும் பொருட்படுத்தாமல் இவர் பின்னாலேயே வந்து கொண்டிருந்தது அவர் ஒருவர் மட்டும் தான். "நீ தானப்பா என்னுடைய உண்மையான சீடன்" என்று கூறி அவரை வாழ்த்தி அவரிடம் தனது பணிகளை ஒப்படைத்தார் குருநானக்.

அவ்வளவுதான் அந்தக் கதை. அதைக் கேட்டதும் உண்மைக்கு ஏன் மரியாதை குறைந்துவிட்டது என்பது புரிகி றது. நல்லவர்களின் பின்னால் போகும் கூட்டம் குறைவதற்கு இது தான் காரணம். காசு தான் முக்கியம் என்று நினைப்பவர்கள் அதிகமாகிவிட்டார்கள் இந்தக் காலத்தில்.

பணம் முக்கியம்தான்... இல்லையென்று சொல்வில்லை! ஆனால் காசு நமக்கு அடிமையாக இருக்கவேண்டும். வேலைக்காரன் மாதிரி இருந்து வேண்டியதை வாங்கிக் கொடுக்க வேண்டும். நாம் காசுக்கு அடிமையாகும் போதுதான் விவகாரம் ஆரம்பம்.

இந்தக் காலத்து குரு ஒருவர். அவருக்கு பின்னாலும் ஏகப்பட்ட சீடர்கள் இருந்தார்கள். ஒரு காலத்தில் ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொருவராக நழுவிப் போய்விட்டார்கள். இப்போது மிஞ்சி இருப்பது ஒரே ஒரு சீடன்தான். மிகவும் பவ்வியமாக கையைக் கட்டிக்கொண்டு அவர் முன்பு உட்கார்ந்திருந்தான்.

"கடைசியில் நீ மட்டுமாவது இருக்கிறாயே அது போதும். நீ தான் எனக்கு உண்மையான சீடன்" என்றார் குரு. அதற்கு அந்தச் சீடன் "அப்படி இல்லை சுவாமி! நீங்கள் இப்போது உட்கார்ந்திருக்கும் பீடத்திற்கு அடியில் பெட்டியில் பணம் வைத்திருக்கிறீர்கள்! அது எனக்குத் தெரியும். அதனால் நீங்கள் எப்போது எழுந்து அந்தப் பக்கம் போவீர்கள் என்று பார்த்துக் கொண்டிக்கிறேன்'' என்றான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# விஞ்ஞான,தொழில்நுட்ப அபிவிருத்தி குறித்து எந்தவொரு அரசும் கவனம் செலுத்தவில்லை

## இதனாலேயே மூளைசாலிகள் வெளியேற்றம் என சுட்டிக்காட்டுகிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டினை ஆட்சிசெய்த அனைத்து அரசாங்கங்களும் விஞ்ஞான, தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் வழங்கவில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாட்டில் இருந்த சிரேஷ்ட விஞ்ஞானிகள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாத அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழகம் மற்றும் வேறு துறைகளில் ஆய்வுகளை மேற்கொள்வோரை ஊக்குவிப்பதில் சிக்கலான சூழ்நிலை நிலவியதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். எனினும் தற்போது இந்த நிலையினை மாற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக தேசிய படைப்புக்களுக்கான தேசிய விருதுகள் வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையில் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற வைபவத்தில் படைப்பாளிகளுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இலங்கையில் பின்பற்றப்பட்டு வந்த சிறந்த கல்வி முறையினால் விஞ்ஞானிகளும் படைப்பாளிகளும் உருவாகிய போதிலும் சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சி செய்த சகல அரசாங்கங்களும் விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்திக்குத் தேவையான சூழ்நிலையினை உருவாக்கவில்லை.

இதன் காரணமாக இரண்டு துறைகளிலும் நிபுணத்துவம் பெற்ற பல் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குச் சென்று அங்கு அவர்கள் உயர்பதவிகளை வகிக்கின்றமை சகலரும் அறிந்த உண்மையென ஜனாதிபதி அங்குமேலும் தெரிவித்தார். (ந-4)

# மாணவர்களுக்கு உடல் ரீதியான —தண்டனை வழங்கத் தடை—

## கல்வியமைச்சின் செயலாளர் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் மத்தியில் ஒழுக்கக் கட்டுப்பாடுகளினைப் பேணுவதற்காக மாணவர்களுக்கு ஆசிரியர்களினால் உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பான அறிவுறுத்தல்கள் அடங்கிய சுற்றறிக்கை ஒன்றினை கல்வியமைச்சின் செயலாளர் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகளை வழங்குவதன் மூலம் ஆசிரியர்கள் அடிப்படை மனித உரிமை மீறல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் விசாரணைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படுவதுடன் கல்வி அதிகாரிகளின் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு உட்படவேண்டி ஏற்படும் என கல்வியமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1989 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் பிரகாரம் பாடசாலையின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளினை பேணும் விடயத்தில் மாணவர்களுடன் கௌரவமான முறையில் நடந்துகொள்ள வேண்டியது கட்டாயமாகிறது.

இந்த உடன்படிக்கையில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது. எனவே பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகளை வழங்குவதைத் தவிர்ப்பதோடு அதற்குப் பதிலாக மாற்று ஒழுங்குகளை பின்பற்றுமாறு ஆசிரியர்களுக்கு பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. (து-4)

# சுகாதாரமற்ற உணவு விற்பனை; ஐவருக்கு ரூ.25 ஆயிரம் அபராதம்

(யாழ்ப்பாணம்)

கடைகளில் பாவனைத்திகதி முடிந்த பொருட்கள், பூச்சி, இலையான் மொய்த்த உணவுப்பண்டங்கள் மற்றும் உடல் நலத்திற்கு தீமை பயக்கும் நிலையில் தயாரித்து களஞ்சியப்படுத்தி வைத்திருந்த உணவுகள் போன்றனவற்றை விற்பனைக்காக வைத்திருந்த குற்றங்களுக்காக கோண்டாவிலில் உள்ள நான்கு கடை உரிமையாளர்களும் திருநெல்வேலியில் ஒரு கடை உரிமையாளரும் கடந்த 6ஆம் திகதி கோண்டாவில், திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கைதுசெய்யப்பட்டு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

ஒத்திவைக்கப்பட்ட இவ் வழக்கு கடந்த 20ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிபதி இ. த. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் ஒவ்வொரு குற்றவாளிக்கும் நீதிபதி தலா 5000 ரூபாய்ப்படி மொத்தம் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ற-19)

# இலஞ்சம் பெற முயற்சித்த —அதிகாரி கைது—

(கொழும்பு)

இலஞ்சம் பெற முயற்சித்த கமத்தொழில் திணைக்களப் பிரதேச அதிகாரி ஒருவரை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் கடுகன்னாவையில் கைது செய்துள்ளனர்.

வயல் நிலம் ஒன்றில் வீடு கட்ட முயற்சித்த ஒருவரிடம் இந்த அதிகாரி இலஞ்சம் பெற முயற்சித்ததாக உயர் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்பாட்டுக்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கும் ஆவணங்களை மாற்றுவதற்கும் இந்த அதிகாரி ரூ.15 ஆயிரத்தை இலஞ்சமாகக் கேட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு ஒன்று கிடைத்துள்ளது.

இந்த அதிகாரி வீட்டில் வைத்து இலஞ்சம் பெற முயற்சித்த போதே அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-2)

# அந்தண சிவாச்சாரியார்களுக்கு அடையாள அட்டை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியமானது அந்தண சிவாச்சாரியார்கள் மற்றும் ஆலயங்களில் கடமையாற்றி வரும் குருமார்களுக்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடாக அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கையினை துரித கதியில் மேற்கொண்டுள்ளது.

இதற்கமைவாக (2001ஆம் ஆண்டு) முன்னர் பதிவுகளை மேற்கொண்டுள்ளோரும் புதிதாக விண்ணப்பிக்கவுள்ளோரும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00மணிமுதல் மாலை 6.00 மணி வரையும் ஆனைப்பந்தியில் அமைந்துள்ள சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைமைச் செயலகத்தில் (குரு குலம்) விண்ணப்பதாரர் நேரில் சென்று பதிவினை மேற்கொள்வதுடன் அந்தண சிவாச்சாரியார் மற்றும் குருமார்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள இச் செயலமர்வில் தவறாது பங்குபற்றி ஒத்துழைப்பு வழங்கிப் பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ)

# சிறுவர் வேலைக்கமர்த்தப்படுவதை கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்

(கண்டி)

சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதைக் கண்டித்து இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு அட்டன் நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

அட்டன் வெலிஓயா மேற்பிரிவைச் சேர்ந்த அர்ச்சுனன் லோகநாதன் என்ற 11வயது சிறுவன் அண்மையில் கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள வீடொன்றில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டான்.

இதேவேளை, குறிப்பாக கொழும்பில் வீடுகளிலும், ஹோட்டல்கள், சில்லறைக் கடைகள், நடைபாதைகளிலும் மலையகத் தோட்டங்களைச் சேர்ந்த சிறுவர், சிறுமியர் சட்டவிரோதமாக வேலைக்கமர்த்தப் படுவதைக் கண்டித்தும் இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

மனித அபிவிருத்தி ஸ்தாபனம், பிரஜைகள் கண்காணிப்பகம் ஆகியன இணைந்து இந்த கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தவுள்ளன. (ற-9)

# புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளருக்கு திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண ஒரு திடீர் நடவடிக்கையாக அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு கூட்டு நடவடிக்கைகளுக்கான பணியகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திடீர் இடமாற்றம் ஆச்சரியமளிக்கத்தக்க ஒரு நடவடிக்கை என விமர்சிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜெனரல் ஹெந்த விதாரணவின் இந்தத் திடீர் இடமாற்றத்திற்கான உத்தரவை இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட பிறப்பித்திருக்கின்ற போதிலும் அதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ற-4)

# தொடரும் மூளைப் படுகொலைகள்

(தொடர்ச்சி...)

மேற்கே நீர்கொழும்பு மற்றும் சிலாபம், புத்தளம் ஆகிய மாவட்டங்கள் முற்று முழுதாகத் தமிழர்கள் வாழ்ந்தார்கள். புத்தளத்தில் தமிழ் பேசும் முஸ்லிம்களும் வாழ்ந்தார்கள். அந்த இடங்கள் இன்று சிங்களமயமாக்கப்பட்டுள்ளது. சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு சிங்களப் பிரதேசம் என்ற முத்திரை குத்தப்பட்டுள்ளது. இந்தப்பகுதிகளில் 48இல் இருந்த பாடசாலைகள் 200 ஆகும். இதில் 190 தமிழ்ப் பாடசாலைகளாகும். ஆனால் தற்போது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. இன்று 190 சிங்களப்பாடசாலைகளும் 10 தமிழ் பாடசாலைகளுமே அங்கு உள்ளன.

இந்த எண்ணிக்கையையும் வரலாற்றையும் சீர் தூக்கிப்பார்க்கும் போது எங்கோ உதைக்கிறது. 40,50களில் நமது மூத்த அரசியல் தலைவர்கள் என்ன செய்தார்கள். இதனை கவனிக்காததால் மேற்குத்தொடரிலுள்ள எமது தமிழ் உறவுகளை இழந்துவிட்டோம் என்ற நெருடல் எமக்கு ஏற்படுகிறது. வடக்கே இருந்து மன்னார் ஊடாக புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு வரை நீண்ட பெருவீதி அமைந்திருக்க வேண்டும். இதனை ஏன் எந்த தமிழ் அரசியல் தலைவரும் வலியுறுத்தவில்லை. இது 48இல் அமைய வாய்ப்பு இருந்திருக்குமானால் மேற்குப்பகுதி பூ ராகவும் தமிழர்களே இன்றும் இருந்திருப்பார்கள். இந்த நிலை ஏற்பட யார் காரணமானவர்கள்? யாராக இருந்தாலும் மன்னிக்கவே முடியாது.

இது தமிழரின் பலத்தைக் குறைக்கவே செய்யும் என்பது வெளிப்படை. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட்ட கிழக்கு மாகாணம் தமிழ் மக்களும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் வாழும் பகுதியாக இருந்துள்ளது. டி.எஸ்.சேனநாயக்கா திட்டமிட்டு சிங்களக் குடியேற்றங்களை நிறுவும் முயற்சியைத் தொடக்கி வைத்தார். அவருக்குப் பின்வந்த ஆட்சியாளர்கள் செவ்வனே அதனைப் பின் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் பாரிய சிங்களக் குடியேற்றங்களை நிறுவி வருகின்றனர். கிழக்கு - மேற்குப்பகுதிகளை சிங்களப் பேரினவாதம் விழுங்கி வருகிறது.

சிங்களக்குடியேற்றம் நடைபெறுவது நிறுத்தப்பட வேண்டுமென்பதே தமிழ் மக்களின் வேண்டுகையாகும். இது சிங்கள ஆட்சியாளர்களினால் நிராகரிக்கப்பட்டே வந்திருக்கிறது. தமிழர்கள் தமது நிலங்களை மீட்கும் காலம் நெருங்கிவிட்டது. தமிழனது தலைநகரம் திருமலை. இந்தத் திருமலையை ஆக்கிரமித்து சிங்களப்படையும் சிங்கள சமூகம் தமிழர்களைப் படுத்தும் பாடும் எவ்வளவு கொடூரத்தை ஏற்படுத்தி வருகிறது. எனவேதான் தமிழ் மண்ணில் சிங்களக்குடியேற்றம் நிறுவப்படுவதும், படையினர் நிலை கொண்டிருப்பதும் பிரச்சினைகளை உருவாக்கக்கூடியதே. ஆதலால் இழந்து போன மண்ணை மீட்க அனைத்துத் தமிழர்களும் ஆடிக்கலவரத்தை மீட்டுப்பார்க்க வேண்டும். தமிழன் அடிபட்டது ஆடியில் மட்டுமல்ல, தமிழன் மீண்டெழுந்ததும் ஆடியில்தான். ஓயாத அலையா? கட்டுநாயக்காவா? ஆனையிறவா? எல்லாமே ஆடியில் தான் வெற்றி கொள்ளப்பட்டன.

தென்னிலங்கையில் நாகரிகமுள்ள எந்தவொரு அரசியல் தலைமைகளும் உருவாகவில்லை. தமிழ் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றக்கூடிய அரசியல் சூழ்நிலைகளை ஏற்படுத்த சிங்கள சமூகமோ சிங்கள புத்திஜீவிகளோ முன்வரவில்லை என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதேவேளை, இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா கடைப்பிடித்துள்ள கொள்கைகள் சந்தேகத்துக்குரியவையாகும். ஆட்சியாளர்களால் நன்கு திட்டமிடப்பட்டு அதற்கெனவே காடையர்களைப் பயிற்றுவித்து பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகளின் அனுசரணையோடு தமிழ் மக்கள் மீதான தாக்குதல் நடாத்தப்பட்டது. இந்த விபரங்களை நிச்சயமாக இந்தியாவால் தெரிந்து கொள்ளாமலிருக்க முடியாது. ஆயினும், இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக இந்தியா கடைப்பிடித்து வந்த அணுகுமுறை தமிழ் மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இலங்கைத் தமிழர் மட்டுமல்ல மலையகத் தமிழரும் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தனர். வன்முறையை நிறுத்தச் சொல்லி ஒரு வார்த்தை இந்தியா கடுமையாக எச்சரித்திருக்குமானால் இவ்வளவு பாதிப்பு ஏற்பட்டிருக்காது. இந்தியாவின் மௌனம் பல கேள்விகளை எழுப்பியது எம் மனதில்.

ஆயினும், காலம் கடந்தாவது பாரதப்பிரதமர் இந்திராகாந்தி எடுத்த சில முடிவுளால் தமிழர்கள் ஆறுதலடைந்தனர். யூலைக்கலவரம் கொழும்பைக் கறுப்பாக்கியது. எங்கும் பீதி, அச்சம் நிலவியது. கலவரங்கள் கட்டுக்கடங்காமல் அது முழு இலங்கையையும் தீக்கிரையாக்கி விடுமோ என்ற நிலை ஏற்பட்டபோது இந்திரா காந்தியின் அறிவிப்பும் வெளிவிவகார அமைச்சர் பி.வி.நரசிம்மராவின் வருகையும் பலவிடயங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இந்திராகாந்தியின் அணுகுமுறையை அவர் மறைவிற்குப்பின் அவரது கட்சித்தலைவர்கள் கடைப்பிடித்திருப்பார்களேயானால் பின்னாளில் இவ்வளவு மோசமான விபரீதம் ஏற்பட்டிருக்காது. இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. தேவையற்ற யுத்தமொன்றை விடுதலைப் புலிகள் மீது திணிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

இவ்வளவு காலத்திற்குப் பின்னாவது இலங்கை தொடர்பாக இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையைப் பரிசீலனை செய்து, விடுதலைப் புலிகளை சுதந்திரப்போராட்ட அமைப்பாக ஏற்றுக்கொண்டு தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும். இதுவே இலங்கைத்தமிழர்கள் விடயத்தில் இந்தியா கடைப்பிடித்த துரோகத்தனத்திற்குப் பிராயச்சித்தமாக அமையும்.

கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளைக் குறிவைத்து அரசபடைகள் தாக்குதல் நடாத்தி வருவதூடாக தமிழ் பேசும் மக்களின் வாழ்வைப் போருக்குள் தள்ளிவிடுவதே பௌத்த சிங்களப்பேரினவாதிகளின் குறிக்கோளாக இருக்கிறது. இது சிங்கள தேசத்தை அழிக்கின்ற செயலாகும். தமிழர்கள் தமது நியாயபூர்வமான சுதந்திரப்போராட்டத்தின் மூலம் விரைவில் விடுதலை பெற்றே ஆவார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது.

கடந்த மூன்றாண்டுக்கு மேலாக விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையில் புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்பட்டும் இதில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை அரசு அமுல்படுத்தவில்லை. இதனை அரசு அமுல்படுத்தியிருக்குமேயானால் இன்று ஏற்பட்டுக்கொண்டிருக்கும் பிரச்சினைகள் இல்லாதொழிந்திருக்கும்.

போர் நிறுத்தம் ஏற்பட்டிருந்தும் ஸ்ரீலங்காப்படைத்தரப்பில் இருந்து ஆயிரக்கணக்கான யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பாக விடுதலைப்புலிகள் புகார் தெரிவித்தும் அரசு கவனத்தில் எடுக்கவில்லை. எத்தனை ஆடிக்கலவரங்கள் தோன்றினாலும், அல்லது எத்தனை தடவை யுத்தங்கள் மூண்டாலும் எதைப்பற்றியும் அலட்டிக்கொள்ளாமல் இருக்கும் ஆட்சியாளர்களின் மனப்பாங்கு மாறாதிருக்கும் வரை. இந்த நாட்டில் எந்த

**கலி**

அதிசயமும் நிகழ்ந்துவிடப்போவதில்லை.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் படையினரின் யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களை அரசு தடுத்து நிறுத்தாவிட்டால் மீண்டும் ஒரு யுத்தம் வெடிப்பதைத் தடுக்க முடியாது. சர்வதேச சமூகத்தின் அங்கீகாரம் இருக்கின்ற சூழ்நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு பின்னடிக்குமானால் விரைவில் நாடு இரண்டாகும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆடிக்கலவரத்தை ஏற்படுத்தி தமிழர்களின் ஆயுதப்போராட்டத்தை வளர்ச்சிபெறச்செய்தவர்கள் பௌத்த சிங்களப் பேரினவாதிகள்தான். இன்று தமிழர்களுக்கு உரிமை கிடைப்பதை எதிர்த்து நின்று கலவரம் செய்வித்தவர்களும் இவர்கள் தான். இதனால் தமிழர்களுக்கென ஓர் நாடு உதயமாவதை வெறுமனே பார்த்துக் கொண்டு நிற்கப்போவது சிங்கள தேசம்தான் என்பது புரிகிறது. (முற்றும்)

# எகிப்தில் தொடர் குண்டுவெடிப்புகள்

## 80 பேர் பலி; 262 பேர் படுகாயம்

(கெய்ரோ)

**எகிப்தில் நேற்று அதிகாலை 1.15 மணியளவில் இரு இடங்களில் அடுத்தடுத்து சிறிது நேர இடைவெளியில் இடம்பெற்ற பாரிய குண்டுவெடிப்புக்களில் 80 பேர் வரை கொல்லப்பட்டுள்ளதுடன், சுமார் 262 பேர் வரை படுகாயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

எகிப்தில் உள்ளது ரெட்சீ சுற்றுலாத தளம். இங்கு மிகப் பிரபலமான பழைய மார்க்கெட் என்ற இடம் உள்ளது. நேற்று இங்கு முதலில் ஒரு குண்டுவெடித்தது. அதைத் தொடர்ந்து ஹோட்டல்கள் நிறைந்த நாமபே என்ற இடத்தில் குண்டுகள் வெடித்தன. அதில் 4 நட்சத்திர ஹோட்டலில் ஒன்று கடும் சேதத்திற்குள்ளானது.

இந்தக் குண்டு வெடிப்புகளில் இங்கிலாந்து டச்சு கட்டார் குவைத் மற்றும் எகிப்தைச் சேர்ந்த 52 பேர் கொல்லப்பட்டனர். 170 பேர் படுகாயமடைந்தனர். மொத்தம் 4 முதல் 7 கார்க்குண்டுகள் வரை வெடித்ததாகக் கூறப்படுகிறது.

முதல் குண்டு வெடித்த 15 நிமிடம் கழித்து நாமபே பகுதியில் கஜாலா கார்டன்ஸ் கவன்பிக் ஆகிய ஹோட்டல்கள் அருகே குண்டு வெடிப்புகள் நடந்தன. முதல் குண்டு வெடிப்பின்போது பொதுமக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். இதன்போது 28 பேர் கொல்லப்பட்டதுடன் 92 பேர் படுகாயமடைந்தனர்.

ஐரோப்பா, இஸ்ரேல், ஜோர்டான் மற்றும் எகிப்திய சுற்றுலாப் பயணிகள் இந்த



ரிசார்ட்டுக்குச் செல்வது வழக்கம். ரெட்சீ ரிசார்ட் பகுதியில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் கார் மற்றும் டிரக் வண்டி குண்டுகள் வெடித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இறுதியாகக் கிடைத்த தகவல்களின் படி சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்த



காயமடைந்தோர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர்...

தில் சுமார் 80 பேர் வரை அதில் கொல்லப்பட்டுள்ளதாகவும் 262 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை, சுற்றுலாத் தளமான அவ்விடத்திற்குப் பலநாட்டு சுற்றுலாப் பயணிகளும் வருகை தந்திருந்ததால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எகிப்துப் பொலிஸார் இக் குண்டுவெடிப்புகள் குறித்துத் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, பலம்வாய்ந்த வல்லரசு நாடான இங்கிலாந்து தலைநகர் இலண்டனில் கடந்த 2 வார இடைவெளியில் இரு தடவைகள் பலம்வாய்ந்த குண்டுத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதும் அதில் சுமார் 65 பேர் வரை உயிரிழந்ததுடன் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ற)

# தனியார்துறை ஊழியர்களுக்கு குறைந்த வட்டியில் வீட்டுக்கடன்

(கொழும்பு)

தனியார் துறை ஊழியர்களுக்கு வீட்டுக் கடன்களைக் குறைந்த வட்டியில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான சுற்றுநிருபம் அடுத்த வாரம் வெளியிடப்படுமெனத் தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இக் கடன் தொகையானது அரசாங்க ஊழியர்களுக்கு வீட்டுக்கடன் வழங்குவது போன்று நான்கு வீத சலுகை வட்டியுடன் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாகத் திறைசேரி மற்றும் மத்திய வங்கியுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளதாகத் தொழிலமைச்சர் தெரிவித்தார்.

தனியார்துற்றை ஊழியர்களின் ஊழியர் சேமஇலாப நிதியில் இருந்து இக் கடன்கள் வழங்கப்படவுள்ளன என்றும் தனியார்துறையில் தொழில் புரியும் சகலரும் இவ் வீட்டுக் கடனைப் பெற்றுக்கொள்ள உரிமை உடையவர் ஆவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கடன் வழங்கல் தொடர்பாக இவ் வாரம் மத்திய வங்கியுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கவுள்ளதுடன், அடுத்த வாரத்தில் இது தொடர்பான சுற்றுநிருபம் தனியார் தொழில் நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

# வவுனியா இராணுவத்துக்கு நீர்விநியோகம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

(வவுனியா)

வவுனியாவில் இராணுவத்தினருக்கு விநியோகிக்கப்படும் குடிநீரில் நஞ்சுப் பதார்த்தத்தினைக் கலப்பதற்கு விடுதலைப் புலிகள் திட்டம் தீட்டி வருவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது என்று இராணுவ தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தகவலை அடுத்து வவுனியா முதல் ஓமந்தை வரையுள்ள இராணுவத்தினருக்கு நீர்விநியோகிக்கப்படும் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இராணுவத் தலைமையகம் மேலும் தெரிவிக்கின்றது.

எனினும், வவுனியா முதல் ஓமந்தை வரையுள்ள இராணுவத்தினருக்கான நீர் விநியோகப் பகுதிகளில் நஞ்சுப் பதார்த்தங்களைப் போடுவது என்பது சுலபமான காரியம் அன்று.

தற்போது குறிப்பிட்ட இடங்களில் உள்ள நீர்விநியோக நிலையங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று இராணுவத் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த இரகசியத் தகவல் குறித்து வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

(கற்கோவளம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். மாவட்ட கிளைப் பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் இ.செ.சங்க யாழ்.மாவட்ட கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா தலைமையில் கடந்த வியாழக்கிழமை கிளைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

நடத்தப்பட்ட ஐந்து (05) பேர் கொண்ட தேர்தல் குழுவினால் தேர்தலில் பத்துப் பிரிவுகளிலிருந்தும் 100 பேர் வாக்களிப்பில் கலந்துகொண்டனர்.

தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகளுக்கே தேர்தல் நடத்தப்பட்டது. ஏனைய 6 செயற்குழு உறுப்பினர்களும் போட்டி இன்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்படி தலைவராகப் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கமும், உபதலைவராக கு.பாலகிருஷ்ணனும், செயலாளராக செ.செல்வக்குமரனும், பொருளாளராக சோ.விக்னேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

செயற்குழு உறுப்பினர்களாக கா.குகபாலன், சூ.தவராசா, நா.குகராசா, செ.துரைரட்ணம், திருமதி ஞா.ஆசீர்வாதம், இ.மயில்வாகனம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (அ-104)



ல உருவாகிறது. அவள் மீது ஏற்
ளும் அதை ஏற்க முன்வருகிறாள்.
ளை பெண்கேட்டுப் போகிறான்.
விடை கொடுக்கிறான். நிலைமை
வரத்தில் இருந்து சென்னைக்கு
யால்தான் சின்னா மாறிவிட்டான்
பத்ரியை கத்தியால் குத்த, வஜ்ர
சின்னா. பொலிஸ் வருகிறது.
ள எஞ்ஜினியர் ரகுவுக்கு திருமணம்
வளது மனதில் சின்னாவின் நினை
ல் இருந்து விடுதலையாகி வரும்
த்துச் செல்வதில் குறியாக இருக்
யை அடைந்தானா? அவள் நிலை

சியிலேயே அவர் யார் என்பதை
வ்வொரு அசைவுக்கும் ஒரு அர்த்



லி சண்டைக்காட்சிகளிலும் 'கிங்'

வதும்...பெண் ஒருத்தியின் அன்பால்
பரவசப்படச் செய்திருக்கிறார்.
சொல்லும்போது பெண்களை கண்
த்தில் வாலிபர்களை வம்புக்கு

க' முத்திரை பதித்திருக்கிறார்.
வதும். அவனுக்குள்ளும் 'மனிதம்'
ப் போவதும் யதார்த்தம். அவனை
துணிவது... பெற்றோர் சொல்வதால்
... தவறு செய்யாத கணவனுக்கு
நினைப்பது... காதலனுடன் கனவு...
மான பரிமாணங்களில்...'விம்ம'
வர்ச்சி...நெருக்கம்... கதைக்கு கை

அலிகான், பொன்னம்பலம் கூட்டணி
ாஜேஷ், சுலக்ஷனா, லிவிங்ஸ்
ஆர்த்தி ஆகியோர் கிடைத்த
நக்கிறார்கள்.
'சின்னா' என்ற முரட்டு மனிதனுக்
வைத்து கதையை மின்னல் வேகத்
ன்றாலும் அதிலும் நியாயம் இருக்
ல வைத்திருக்கும் சாமர்த்தியம்

ன் முக்கிய பாத்திரங்கள் மூன்று
சிகர்களை இருக்கையின் ஓரத்
10 மாடி கட்டடத்தில் ஏற்றிவிட்டு
ட்சியில் உச்சந்தலைவரை கிளு
மான். பின்னணி இசையை பிரமா
பிரமணியம் பாடும் 'யார் யாரோ'
பவர் மனிதிலும் மீண்டும் மீண்டும்

களுக்கு பிரகாசம்.... குறைகள்
ம் செலுத்தியிருக்கிறார்கள்.
(ா)ம்.

## இன்ப அதிர்ச்சியில் நயன்

ஷஜயா'வில் அறிமுகமாகி, ஷசந்திரமுகி' யில் பிரபலமான நயன் நடிகையை தேடி ஒரு ஹிந்திப்பட வாய்ப்பு வந்தது. அந்தப் பட அதிபர் பொலிவுட்டில் நம்பர்-1 தயாரிப் பாளர். அவரிடம் சம்பளமாக ஒரு பெரிய தொகையைக் கேட்டார் நயன். சிரித்துக் கொண்டே ஒரு ஷசெக்' கில்' சம்பளத் தொகையை எழுதினார் பட அதிபர். வாங் கிப்பா ர்த்த நயன் இன்ப அதிர்ச்சியில் திக்குமுக்காடிப் போனார். அவர் கேட் டதை விட இரண்டு மடங்கு சம்பளம், அந்த செக்கில் நிரப்பப்பட்டு இருந்ததாம்.

## பார்த்திபன் – வடிவேலு கலக்கும் 'குண்டக்கா மண்டக்கா'.

திரைக்கு வந்து வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'அறிந்தும் அறி யாம'லும் படத்தை தயாரித்த புன்ன கைப்பூ கீதாவின் எஸ்.ஜி.பிலிம்ஸ் பிரை வேட் லிமிடெட் வழங்க சூப்பர் ஸ்டார் மூவீஸ் பட நிறுவனம் சார்பாக திருமதி லீலா கேசவன் பிரமாண்டமான முறையில் தயாரிக்கும் படம் 'குண்டக்கா மண்டக்கா'

இந்தப் படத்தில் பார்த்திபன் கதா நாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக லஷ்மிராய் நடிக்கிறார். முக்கிய வேடத்தில் வடிவேலு நடிக்கிறார். மற்றும் மல்லிகா, கலைராணி, ரவிக்குமார், மதன்பாப், வனிதா, ராஜமதன், பயில்வான் ரங்கநாதன் நடிக்கிறார் கள். புதுமுகம் அம்ருத் என்பவர் அறிமுக மாகிறார்.

• ஒளிப்பதிவு: பரண்ஸ்ரீ இவர் அறிமுகமாகும் முதல் படம் இது.

பாடல்கள்: சினேசன்

இசை:பரத்வாஜ். திரைக்கதை அமைத்து இயக்குகிறார் அசோக்.. இணை தயாரிப்பு: புன்னகைப்பூ கீதா, தயாரிப்பு: திருமதி லீலா கேசவன்.

அண்ணன், தங்கை சென்டிமென்டை மைய மாக வைத்து உருவாக்கப்படும் படமே 'குண் டக்கா மண்டக்கா' தாய், தகப்பன் ஸ்தானத் திலிருந்து தனது தங்கைக்கு கோடீஸ்வர மாப்பிள்ளையை மணமுடிக்க அண்ணன் எவ் வாறு போராடுகிறான் என்பது படத்தின் கதை!



## விக்ரமிடம் கதை சொல்ல போட்டி


ஷமஜா' முடித்ததும் விக்ரமுக்கு கதை சொல்ல நான்கைந்து இயக்குநர்கள் காத்திருக் கின்றனர். விக்ரம் கதை கேட்பதாகக் கூறியிருப்பது, திருப்பாச்சி இயக்குநர் பேரரசு, சச்சின் இயக்குநர் ஜான் ஆகியோரிடம்தான்.

ஹிந்தியில் தயாராகும் 'சந்திரமுகி'யில் அமிர்தாப்பச்சன் நடிக்கிறார்..



'சாணக்யா'
சரத்குமார் - நமீதா

## பி.வாசு டைரக்ஷனில் மீண்டும் ரஜினி



ரஜினிகாந்த் நீண்ட இடைவெளிக்குப்பிறகு பி.வாசு டைரக்'னில் நடித்து சிவாஜி பிலிம்ஸ் தயாரிப்பில் வெளியான ஷசந்திரமுகி'படம் மாபெரும் வெற்றிபெற்று தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

அடுத்து ரஜினிகாந்த் நடிக்கும் புதிய படத்தை தயாரிக்க பலர் முன்வந்தனர். என்றாலும் சரியான கதை கிடைக்காததால் அதற்கான ஏற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை.

இப்போது ரஜினியின் புதிய படத்தை தொடங்குவதற்கான வாய்ப்புகள் தெரியத் தொடங்கியுள்ளன. பிரபல படத்தயாரிப்பாளர் பூர்ணசந்திரராவ் இந்தப் படத்தை தயாரிக்கலாம் என்று தெரிகிறது. இது தொடர்பாக அவர் சமீபத்தில் ரஜினிகாந்தைச் சந்தித்துப் பேசியுள்ளார். அவருக்கு ரஜினியின் அடுத்த படத்தை தயாரிக்கும் அதி'டம் கிடைக்கலாம் என்று கூறப்படுகிறது. பூர்ண சந்திரராவ் ஹிந்தியில் ரஜினி நடித்த ஷஅந்தாகானூன்', ரஜினி 3 வேடங்களில் நடித்த ஷஜான் ஜானி', ஷஜனார்த்தன்' ஆகிய படங்களை தயாரித்தவர். அமிதாப்பச்சனுக்கும் நெருங்கிய நண்பர். எனவே அவரது கோரிக்கையை ஏற்று அடுத்த படத்தில் நடிக்க ரஜினி ஒப்புக்கொள்வார் என்று பரவலாகப் பேசப் படுகிறது.



'ஒருநாள் ஒரு கனவு'
ஸ்ரீகாந்த் - சோனியா அகர்வால்

இதற்காக டைரக்டர் பி.வாசு விடம் உள்ள சில கதைகள் ரஜினியிடம் சொல்லப்பட்டன. அதில் ஒரு கதை தேர்வு செய் யப்பட்டு தயாரிக்க எ ப்படுவதற் கான அறி குறிகள் தெரிகின்றன.

ரஜினிகாந்த் தன்னை ஹிந்தியில் பிரபலம ாக்கிய தயாரிப்பாளர் பூர்ணசந்திர ராவ் படத்தில் நடிப்பதன்மூலம் அவரு க்கு உதவ நினைக் கிறார். எனவே பூர்ணசந்திரரா வின் புதிய படத்தில் பி.வாசு டைரக்'னில் ரஜினி மீண் டும் நடிப்பார் என்பது உறுதி யாகிவிட்டது என்று சினிமா வட் டாரங்கள் தெரிவிக்கின் றன.

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 12

பி.ஜே.ராஜய்யா

## பிரதமரை சுட்டான்!

சிறையில் அடைக்கப்பட்டிருந்தான் சதாம்...

கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மைத்துனனைக் கொன்றதற்காக அவனும், கொலைத்திட்டம் தீட்டியதற்காக மாமா கைருல்லாவும் கைது செய்யப்பட்டிருந் தார்கள்.



அரசியல் போட்டி காரணமாக அந்த காலகட்டத்தில் ஈராக் முழுக்க, அராஜகம் தலைவிரித்தாடிக் கொண்டிருந்தது. அரசியல் கொலைகள் சர்வசாதாரணமாக நிகழ்ந்துகொண்டிருந்தன. இந்தக் குழப்பத்தில் யாரைப் பிடிப்பது? குற்றத்தை எப்படி நிரூபிப்பது? என்ன தண்டனை கொடுப்பது? என்று தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்த காசிம் அரசு பெரும்பாலான குற்றவாளிகளை தண்டனையின்றி விடுவித்துக்கொண்டிருந்தது. அந்த வகையில் சதாமும், கைருல்லாவும் கூட ஆறுமாதங்களில் விடுதலை செய்யப்பட்டு விட்டார் கள்...! இலட்சியத்திற்காக மையத்துனனையே கொன்ற சதாமின் கொள்கைப் பிடிப்பு, மறுமலர்ச்சிக் கட்சி வட்டாரத்தில் பெருமையாக பேசப்பட்டது அவனது தீணிகரம் சிலாகிக்கப்பட்டது.

கட்சித் தலைமையின் நம்பிக்கைக்கு உரியவன் ஆனான் சதாம். பிரதமர் காசிம் தங்கள் இனத்திற்கும் தேசத்திற்கும் துரோகம் செய்வதாக முழுமையாக நம்பிய மறுமலச்சிக் கட்சி இனியும் அவரை விட்டுவைக்கக்கூடாது என்று முடிவு செய்தது. பிரதமரைக் கொல்ல ரகசியமாக அதிரடிப்படை ஒன்று அமைத்தது. அந்தப் படைக்கு 22 வயது சதாம் தலைமை ஏற்றான்.

அக்டோபர், 7,1959, பாக்தாத் நகரின் அக்-ரஷீத் சாலை, பட்டப்பகல்.

சதாம் தயாராக காத்திருந்தான். கையில் துப்பாக்கியுடன் தலைமறைவான இடத்தில் . அவன் நெஞ்சு நிறைய ஒரே ராகம்... "சுட்டுக்கொல்லனும் பிரதமரை சுட்டுக்கொல்லனும்..." இது சாதாரண விஷயமா? பலத்த பாதுகாப்புடன் பவனி வரும் பிரதமரை சுட்டுக்கொல்வது அத்தனை சுலபமான காரியமா?



"கண்ணை மூடித் திறக்கிறதுக்குள்ள காரியத்தை கட் சிதமாய் முடிச்சுடனும்!" தன்னைச் சுற்றி நோட்டம் விட்டான்... அவன் சொன்ன பொசிஷனில் எந்திரத்துப்பாக்கிகளுடன் அவனது நண்பர்கள் அவன் கண் அசைவுக்காக அவர்கள் காத்திருந்தார்கள்.

அவன் பிரதமரின் வருகைக்காக காத்திருந்தான். அதோ ... பிரதமரின் கார்... சதாமின் முகத்தில் மின்னலடித்தது. உஷாரானான். பிரதமரின் கார் வந்து நின்றது. அதற்குப் பின்னால் பிரதமரின் பாதுகாப்புப்படையினர் வந்த கார்கள் வரிசையாக. நொடிப் பொழுதையும் வீணாக்கவில்லை சாதம். உத்தரவுக்காக காத்திருக்கும் நண்பர்களுக்கு கண் ஜாடை காட்டி விட்டு துப்பாக்கி விசையைத் தட்டினான்.

எந்திரத்துப்பாக்கிகள் திடீரென அலறி அமைதியைக் குலைத்தன. பிரதமரின் காரை நோக்கி சரமாரியாக குண்டுகள் சீறிப்பாய்ந்தன.

பிரதமரின் கார் சல்லடையானது. பிரதமர் காசிமின் தோள்பட்டையைக்குண்டு பதம் பார்த்தது. ரத்தம் பொங்க அவர் சட்டென காருக்குள் குனிந்து தலை மறைவானார்.

பிரதமரின் உயிரைப்பறிக்க அந்தக் காயம் போதாது என்று பட்டது சதாமுக்கு. ஆனால் அவர் காருக்குள் குனிந்துகொண்டதால் அவனால் மீண்டும் அவரை சுட முடியவில்லை.

இதற்குள் பிரதமரின் பாதுகாப்புப்படையினர் துப்பாக்கிகளுடன் கீழே இறங்கி ஓடி வந்தனர். குண்டுகள் பாய்ந்து வந்த திசை நோக்கி திருப்பிச் சுட ஆரம்பித்தனர்.

இரு தரப்பினருக்கும் கடும் துப்பாக்கிச் சண்டை மூண்டது. திடீரென சதாம் தம் மீது இடி விழுந்ததைப்போல உணர்ந்தான். எங்கிருந்தோ பாய்ந்து வந்த குண்டு அவன் காலைத் துளைத்து உள்ளுக்குள் குடியேறியிருந்தது. இரத்தம் பொங்கியது. தீயாய் வலித்தது...

ஒரு கணம் தடுமாறினான் மறுகனம் "ச்சூ..." என்று காலை உதறிவிட்டு தொடர்ந்தும் சுட்டான். பாதுகாப்புப்படையினர் மெல்ல மெல்ல முன்னேறி தங்களை நோக்கி வருவதைக் கவனித்தான். இனியும் இருப்பது ஆபத்து என்று நண்பர்களை பின்னோக்கிச் செல்ல ஜாடை கட்டினான். உடனே அவர்கள் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டே பின்வாங்கினார்கள். ஒழிந்து ஒழிந்து ஓடினார்கள்.

சதாமால் வேகமாக ஓட முடியவில்லை. குண்டடிபட்ட கால் ஒத்துழைக்க மறுத்தது. வலி தாங்காமல் தள்ளாடினான்.

சற்று மறைவான இடம்தேடி தடுமாறி ஓடி ஒழிந்தான். தன்னிடமிருந்த ரேசர் பிளேடை எடுத்தான். தன்னுடன் ஓடி வந்திருக்கும் நண்பனிடம் அதைக்கொடுத் தான்.

"என் காலை அறு. குண்டை வெளியே எடு" நண்பன் தயங்கினான். "யோசிக்காதே நேரம் இல்லை"... சதாம் அவசரப்படுத்தினான் .நண்பன் ரேசர் பிளேடால் சதாமின் கால் சதையைக்கிளித்தான். குபு குபுவென இரத்தம் பொங்கி வழிந்தது. குண்டை பிளேடால் எம்பி வெளியே எடுத்தான்.

மெதுவாக சதாமின் கண்கள் பஞ்சடைய ஆரம்பித்தன. மயக்கமடைந்தான்.

அவன் மயக்கம் தெளிந்து எழுந்த போது நண்பன் தன் உள்ளாடையைக்கிளித்து காயத்திற்கு கட்டுப்போட்டிருந்தான். சதாம் அவனை நன்றிப்பெருக்குடன் பார்த்தான். சற்றுத்தொல்லைவில் விசில்சத்தம் கேட்டது. "போலீஸ் வருது" என்று பதட்டத்துடன் சொன்ன நண்பன் "புறப்படு" என்று கூறிவிட்டு, அவன் தன்னோடு வருகிறானா? இல்லையா? என்று கூட கவனிக்கமறந்து இருட்டுக்குள் ஓடி மறைந்தான்.

சதாம் எழுந்தான் அவசர அவசரமாக ஆடைகளைக் கழற்றினான். ஆதிவாசி போல் வேடம் பூண்டான் அப்பாவி போல் வெளிச்சத்துக்கு வந்தான் பலமாய்க் கால் ஊன்ற முடியாமல் தாங்கி தாங்கி நடந்தான். எதிரே அகலமாய், ஆழமாய் இரைந்தோடும் டைக்ரீஸ் ஆறு... அக்கம் பக்கம் பார்த்தான் அவன்... தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டவுடன் ஆற்றுக்குள் குதித்தான்...

(தொடரும்)

# ஐ. ஓ. எம் நிறுவன உதவி முல்லைக்கும் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் அகதி முகாம்களில் வசித்து மீளவும் நாடு திரும்பிக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவி புரிந்து வருகின்ற புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (ஐஓஆ) 2002 ஆம் ஆண்டில் சமாதான உடன்படிக்கைக்கு பின் இந்தியாவில் இருந்து மீளவும் நாடு திரும்பியவர்களுக்கு தொழில் சார்ந்த உதவிகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளது.

எனவே, 2002 சமாதான உடன்படிக்கைக்குப்பின் நாடு திரும்பி உதவிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தங்கள் பதிவுகளை இம்மாதம் 25ஆம் திகதி தொடக்கம் மேற்கொண்டு உதவியை பெற்றுக்கொள்ள முடியும் என புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவன (ஐஓஆ) அதிகாரி அறிவித்துள்ளார்.

படகுகள் மூலம் மீளத்திரும்பியவர்களும் யு. என். எச்.சி.ஆர் உதவியுடன் விமான மூலம் மீளத்திரும்பியவர்களும் தங்களது விபரங்களை தத்தம் பகுதி கிராம சேவையாள்ர் மற்றும் பிரதேச செயலர் உறுதிப்படுத்திய கடிதம் மற்றும் இந்தியாவில் இருந்து மீளத்திரும்பிய திகதியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களுடன், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இல.70, கோவில் வீதி, (ரெம்பிள்றோட் ), யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்துடனும்(ஐஓஆ), கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 155ஆம் கட்டை கிளிநொச்சி உலக உணவுத்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள புலம் பெயர்தலுக்கான சர்வதேச நிறுவன (ஐஓஆ) அலுவலகத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கான உதவித்திட்டத்தை பெற்றுக்கொள்ளும் பொருட்டு தங்கள் பகுதியில் உள்ள கிராமசேவையாளர் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

மேற்படி நிறுவனம் இதுவரை யாழ். மாவட்டத்தில் 470 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 177பேருக்கும் தொழில் சார்ந்த உதவிகளையும் 196 பேருக்கு நிரந்தர மலசல கூடத்தையும் வழங்கியதுடன் பல்வேறு சமுகம் சார்ந்த வேலைத்திட்டங்களையும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஓமந்தையில் பழைய பதுங்கு குழிகளையே இராணுவத்தினர் திருத்தியமைப்பு

## கண்காணிப்புக்குழு விளக்கம்

(வவுனியா)


ஓமந்தையில் இராணுவத்தினரின் பதுங்குகுழிகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளால் செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு விளக்கமளித்துள்ளது.

ஓமந்தைப்பாதுகாப்பு முன்னரங்கப் பிரதேசத்தில் புதிதாக பதுங்குழிகளை அமைப்பதாகவும் அது யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் என்றும் விடுதலைப்புலிகள் கடந்த 20ஆம் திகதி யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவினரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இம்முறைப்பாட்டிற்கு அமைய கண்காணிப்புக்குழு அந்தப் பிரதேசத்திற்கு சென்று பார்வையிட்டதாகவும் எனினும் அங்கு காடுகள் துப்பரவு செய்யப்பட்டு வருவதுடன் பழைய பதுங்குகுழிகளே திருத்தப் பட்டுவருவதாகவும் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறப்படவில்லை என்றும் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

(ந-4)





இத்தாலியில் நடைபெற்ற அழிப்பேரலையின் அரையாண்டு நினைவு கூரல் நிகழ்வின் படத்தொகுப்பு.

அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு - குறள்

வலம்புரி

# யாழ். பல்கலைக்கழகம் இயங்க ஊழியர்கள் உதவவேண்டும்

பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் முடிவின்றித் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இலங்கையில் கடந்த சில வருடங்களாக வேலைநிறுத்தப் போராட்டம் மலிந்துபோயுள்ளதாயினும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தமென்பது அடிக்கடி தொடர்ந்தவண்ணம் இருப்பது வேதனைக்குரியதாகும்.

உலகம் நவீன தகவல் தொழில்நுட்பத்தில் உச்சநிலையை எட்டியுள்ள நேரத்தில் இலங்கை நாடோ ஊழியர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாமல் திண்டாடுகிறது.

எங்குபார்த்தாலும் வேலைநிறுத்தப் போராட்டம். இதனால் மாறிவரும் முகாமைத்துவ சிந்தனைகளை உள்வாங்கமுடியாத நிலையில் நாடு பின்நோக்கிச் செல்கிறது. பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் நியாயமானதா? நியாயமற்றதா? என்ற வாதங்கள் இங்கு தேவையற்றதாகும்.

மாறாக பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் பாதிக்கப்படும் பிரதேசம் எது? மாணவர்கள் யார்? என்ற கேள்விகளை முன்னெழுப்பினால் அதற்கான விடை தமிழ் மாணவர்கள் என்பதாகவே இருக்கும். குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கடந்த கால யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

நான்கு வருடங்களுக்குள் பூர்த்திசெய்ய வேண்டிய பட்டப்படிப்பிற்காக எட்டு வருடங்களைச் செலவிட்ட வரலாறு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு உண்டு. இதேபோல் ஏனைய பீட மாணவர்களும் தமது கற்கை நெறிக்கான பாடத்தைவிட மேலும் இரண்டு மூன்று வருடங்களைச் செலவிட்டனர்.

இந்தப் பாதிப்பால் பல்கலைக்கழகப் படிப்பை பாதியில் விட்டுவிட்டு சென்ற மாணவர்கள் கற்கை நெறிக்கான காலம் நீடித்ததால் படிப்பைக் கைவிட்டு தொழில் பார்க்கும் நிர்ப்பந்தத்திற்கு ஆளானவர்கள் என்றதொரு நீண்டபட்டியலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் நாம் கண்டுகொள்ளலாம்.

யுத்தகாலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இயங்காமல் இருந்தபோது தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்கள் ஒழுங்காக இயங்கின. சிங்கள மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பற்றி எந்தவித சிந்தனையும் இல்லாமல் தமது படிப்புடன் நின்றுவிட்டனர்.

இந்நிலையில் தற்போது நடைபெறுகின்ற வேல்லநிறுத்தம் இலங்கை பூராகவும் நடைபெற்றாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்கள் தமிழ் மாணவர்களின் நலன்கருதி அவர்களின் பல்வேறு கஷ்டநிலை கருதி வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு பல்கலைக்கழகம் இயங்குவதற்கு உதவவேண்டும்.

தென்னிலங்கைப் பல்கலைக்கழக ஊழியர்களின் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக அடையாள வேலைநிறுத்தத்துடன் யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் தமது பாரம்பரிய பணியைத் தொடரவேண்டும். இது தமிழ் மாணவர்களுக்கு செய்யும் பேருதவியாகும்.

# மேலைத்தேய சக்திகளிடம் ரணிலின் பட்ட நூல்! நூல் அறுந்த பட்டமாக ஜனாதிபதி சந்திரிகா!!

## இதனாலேயே புலிகளுடன் ஒப்பந்தம் என்கிறார் விமல் வீரவன்ஸ



(கண்டி)

**ஜனாதிபதி தேர்தல் எப்போது நடத்தப்படவேண்டும் என்பது குறித்து தீர்மானிக்கவேண்டியது இலங்கை அரசே தவிர, மேலைத்தேய சக்திகள் அல்ல என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**



நாட்டைக்காட்டிக்கொடுக்கும் உடன்படிக்கை மற்றும் நாட்டின் எதிர்காலம் என்ற தலைப்பில் கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க எனும் பட்டத்தின் நூல் எங்கே இருக்கிறது என இதன்மூலம் தெளிவாகத் தெரிகின்றது.

• ஜனாதிபதியின் பட்டத்தின் நூல் அறுந்தபோது அதனைக் காப்பாற்ற யாரும் இல்லாவிடினும், ரணிலின் பட்டத்தின் நூல் அறுந்தால் அதனைக் காப்பாற்ற மேலைத்தேய சக்திகள் உள்ளன. எமது நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டியது 2005ஆம் ஆண்டிலா அல்லது 2006 ஆம் ஆண்டிலா? எனத் தீர்மானிக்க வேண்டியது எமது நாடே அன்றி, சர்வதேச சக்திகள் அல்ல.

இதன்மூலம் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் மேற்கைத்தேய சக்திகளுக்குமிடையே இருக்கும் தொடர்புகள் தெளிவாகின்றது.

இன்று எமது நாடு பல பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளது. சில பிரச்சினைகள் மிகவும் சிக்கலானவை. தீர்வுகளைப்பெறுவதற்கு கடினமான அளவிற்கு அவை சிக்கலாகியுள்ளன.

விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்திக்கொண்ட பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையினால் அந்த பிரச்சினைகள் மேலும் சிக்கலடைந்துள்ளன. இந்த உடன்படிக்கையினால் ஜே.வி.பி. அரசாங்கத்தை விட்டு வெளியேறியது. இந்த நிலைமையின் கீழ் இருக்கும் சர்வதேச தொடர்புகள் எவை என்பது குறித்து புரிந்துகொள்ளுதல் மிகவும் அவசியமாகும். இந்த தொடர்புகளைப்பற்றி விரிவாக நாம் கவனம் செலுத்தி அவற்றை ஆராய்தல் அவசியம். இந்த விடயங்கள் தொடர்பில் ஆழமாக கவனம் செலுத்துகையில், எமக்கு ஒரு விடயம் நன்றாக புரிகிறது.

ஜனாதிபதி பட்டத்தின் நூல் இப்போது அறுந்துபோயுள்ளது. எனினும் ரணிலின் பட்டத்தின் நூலை பாதுகாக்க சர்வதேச சக்திகள் உள்ளன. ரணில் விக்கிரமசிங்கவிற்கு அந்த சக்திகள் தலைமைப் பதவியையயும் வழங்கியுள்ளன. ஆதரவையும் வழங்கி வருகின்றன.

ஜனாதிபதிக்கு அவ்வாறான உதவிகள் இல்லாமையினால் விடுதலைப்புலிகளுடன் உடன்படிக்கையினை கைச்சாத்திட்டும் அவருக்கு ஒரு நன்மையும் கிட்டவில்லை எனவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

(ற-4)

# 400 கோடி ஆண்டுகளாக உறைநிலையில் செவ்வாய்!

## எரிகல் ஆராய்ச்சியில் கிளம்பியது புதுக்குழப்பம்

(வோஷிங்டன்)

செவ்வாய்க்கிரகம் கடந்த 400 கோடி ஆண்டுகளாக உறைந்து கிடக்கிறது. அங்கு, உயிரினங்கள் தோன்றுவதற்கான வெப்பச் சூழ்நிலை இருந்திருக்கமுடியாது என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

செவ்வாய்க்கிரகத்தில் இருந்து பெயர்ந்து விழுந்த இரண்டு எரிகற்களை அமெரிக்காவைச் சேர்ந்த பெஞ்சமின் வெயிஸ், அவருடைய மாணவர் டேவிட் சூஷ்டர் என்பவரும் ஆராய்ச்சி செய்துள்ளனர். மசாசூசெற் தொழில்நுட்ப மையத்தில் துணைப்பேராசிரியராக பெஞ்சமின் உள்ளார். செவ்வாய் எரிகற்களை ஆராய்ச்சி செய்ததன்மூலம் கிடைத்த தகவலை அறிவியல் பத்திரிகையில் இவர்கள் கட்டுரையாக வெளியிட்டுள்ளனர்.

தற்போது உறைந்த நிலையில் உள்ள செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் தோன்றக்கூடிய அளவிற்கு ஒரு காலத்தில் வெப்பநிலை இருந்திருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறிவருகின்றனர். பெஞ்சமின் கருத்து இந்த கொள்கையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது.

கட்டுரையில் பெஞ்சமின் சுஷ்டர் கூறியுள்ள விபரம் செவ்வாய்க்கிரகம் 100 அல்லது நூற்றுக்கு 50 ஆண்டுகளுக்கு முன் கடந்த 400 கோடி ஆண்டுகளாக உறைந்து கிடக்கிறது என்பது தெரியவந்துள்ளது. உயிரினங்கள் தோன்றுவதற்குத் தேவையான மித வெப்பநிலையில் செவ்வாய்க்கிரகம் எப்போதும் இருந்திருக்க வாய்ப்பில்லை. செவ்வாய்க்கிரகத்தில் இருந்து இந்த எரிகற்கள் பெயர்ந்து விழுந்தபோது நீரின் கொதிநிலைக்கு மேல் அவற்றில் வெப்பம் இருந்திருக்க முடியாது. குறிப்பிட்ட வெப்பநிலைக்கு மேல் பாறைகளில் இருந்து ஆர்கன் என்ற வாயு வெளியாகும். எரிகற்கள் மிகவும் குளிர்ந்த நிலையில் இருப்பதால் அவற்றில் அதிகளவு ஆர்கன் வாயு இருக்கக்கூடும். எரிகற்களில் இருந்து குறைந்த அளவு ஆர்கன் வாயு வெளியாகியிருக்கிறது. இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சம். இவற்றை ஆராய்ந்ததன் மூலம் மிக நீண்டகாலம் இவை குளிர்ந்த நிலையில் இருக்கின்றன என்பது புலனாகின்றது. பூமியில் அறைவெப்பத்திற்கும் குறைவாக நீண்டகாலத்திற்கு ஒரு பாறைகூட இருக்காது. அப்படிப்பட்ட பாறையை காண்பதும் கடினம் செவ்வாயில் வெப்ப நீரூற்றுக்கள், குளங்கள் அல்லது திரவக்கசிவுகள் இருக்கின்றதா என்று ரோவர் ஆராய்ந்து வருகின்றது. எங்கள் கருத்தின்மூலம் அது நேரத்தை வீணாக்கிக்கொண்டிருப்பதாக அர்த்தமில்லை. தரைதளத்திற்குக் கீழ் ஏற்படும் புவி வெப்பநிலை செயற்பாடுகள் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சிறிய பகுதிகளை செவ்வாயில் உருவாக்கி இருக்கக்கூடும் இவ்வாறு அக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

(ற)

# 59 பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வுகள் இரத்து!

(கொழும்பு)

இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் பதவி உயர்பெற்ற 59 பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வுகளை தேசிய காவல்துறை ஆணைக்குழு ரத்துச்செய்துள்ளது.

இதன்படி சப்-இன்ஸ்பெக்டர்களாகவும், சார்ஜன்ட்களாகவும் பதவி உயர்த்தப்பட்ட 59 பேரின் பதவி உயர்வுகளையே உடனடியாக அமுலுக்குவரும் வகையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு ரத்துச்செய்துள்ளது. இந்த 59 பேரும் பதவியுயர்வு பெறுவதற்கான தகுதியுடையவர்கள் அல்லர் எனத் தேசிய காவல்துறை ஆணைக்குழு பொலிஸ் அதிபருக்கு தெரிவித்துள்ளது.

2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையிலேயே இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்தப் பதவியுயர்வுகளை ரத்துச்செய்த தேசிய பொலிஸ் ஆணைக்குழு முதலில் வகித்த பதவிகளிலேயே அவர்களை பணிக்கு அமர்த்தியுள்ளது.

பதவி உயர்வுபெற்ற இந்த 59 பேரில் பதவி உயர்வு நிறுத்தப்பட்டவர்களில் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள், பணியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் சேவையை விட்டு சென்றவர்கள் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றாதவர்கள் எனப்பலரும் உள்ளடக்குவதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(ற)



## தினசரி தியானம்


## விவேகச் சிந்தனைகள்

"நான்" என்பதை ஒழித்து விடு இழந்துவிடு மறந்துவிடு. இறைவன் அவனுடைய செயல்களைச் செய்து கொள்ளட்டும். இது அவனுடைய கடமை. ஒதுங்கியிருப்பதைத் தவிர வேறு வேலை எதுவும் நமக்கு இல்லை. இறைவனது செயல் நிகழட்டும்

சுவாமி விவேகானந்தர்

# JAFFNA CELLULAR

## முக்கிய சிறப்புக்கள்




வைக்கக் கூடியது
தன்னிச்சையாக தன்மை கொண்டது
☞ ஐஸ் கட்டியாவதைக் காட்டும் கருவி கொண்டது
☞ நீர்மட்டக் குறைவைக் காட்டும் கருவி கொண்டது
☞ 24 மணிநேரத்தில் 15kg ஐஸ் கட்டியைத் தயாரிக்க முடியும்
☞ விருப்புக்கேற்ப மூன்றுவிதமான உருவில் ஐஸ் தயாரிக்கலாம்
☞ அதி உச்ச செயல்திறனுடைய R-134a கொம்பிரஸர்
☞ நல்ல தண்ணீரில் ஐஸ் உற்பத்தி
☞ சுலபமான பராமரிப்பு.

*சிறிய மது விற்பனை நிலையங்கள் *சிற்றுண்டிச் சாலைகள் *மருந்தகங்கள் *திரவ விற்பனை நிலையங்கள் *அவசர உணவுச் சாலைகள் *வீடுகள் *கப்பர் மார்க்கெற்றுகளுக்கு உகந்தது.

**யாழில்**

விற்பனையும் பராமரிப்புச் சேவையும்

**JAFFNA CELLULAR**

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 0777 738888, 0713080808



# பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி அதிரடி விலைத் தள்ளுபடி

| டயலொக் காட் கனக்சன் | டயலொக் பில் கனக்சன் | டயலொக் பில் கனக்சன் | மொபிற்றல் பில் கனக்சன் |
| --- | --- | --- | --- |
| | மாத வாடகை 300/= | மாத வாடகை 500/= | மாத வாடகை 300/= |
| 11500/= | 15000/= | 15000/= | 17000/= |

"வெளிச் செல்லும்

*வெளிச் செல்லும் அழைப்பு பகல் 12/=
*வெளிச் செல்லும் அழைப்பு இரவு 6/=
*உள்வரும் அழைப்பு பகல் 5/=
*உள்வரும் அழைப்பு இரவு 2/=
*டயலொக்கிற்கு டயலொக் உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

*வெளிச் செல்லும் அழைப்பு பகல் 9.50
*வெளிச் செல்லும் அழைப்பு இரவு 6/=
*டயலொக்கிற்கு வெளிச் செல்லும் அழைப்பு 4.20
*இரவு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

*வெளிச் செல்லும் அழைப்பு பகல் 9/=
*வெளிச் செல்லும் அழைப்பு இரவு 6/=
*டயலொக்கிற்கு வெளிச் செல்லும் அழைப்பு 4.20
*உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

*வெளிச் செல்லும் அழைப்பு பகல் 9.50
*வெளிச் செல்லும் அழைப்பு இரவு 6/=
*உள்வரும் அழைப்பு பகல், இரவு முற்றிலும் இலவசம்
*மொபிற்றலுககு பகல், இரவு வெளிச் செல்லும் அழைப்பு 6/=

## உத்தரவாதம் உண்டு




# கையடக்க தொலைபேசிகள் விற்பனையும் பழுது பார்த்தும் கொடுக்கப்படும்.

**0712 - 399220 / 0714 - 182500**

தொடர்புகட்கு

# பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி

**Office: 185, 1ஆம் மாடி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**Shop: 205/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


... இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.07.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.